தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.11.2013**

**வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள்**

தூத்துக்குடி மாவட்டத்தில் நிகழாண்டில் மழை குறைவு காரணமாக பயிர்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளதால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்த ஆய்வை உடனே தொடங்க வேண்டும் என வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் ம. ரவிக்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வேளாண் துறை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் ரா. முத்து, தாமிரவருணி வடிநிலைக் கோட்டப் பொறியாளர் முத்துபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் ஆட்சியர் ம. ரவிக்குமார் பேசுகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் மழையளவு கடந்தாண்டை விட இப்போது 50 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு 568 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. ஆனால் நிகழாண்டில் இதுவரை 281 மி.மீ. மட்டுமே பதிவாகி உள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 224 மி.மீ. மழை பெய்தது. ஆனால், இப்போது 66 மி.மீ. மட்டுமே மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 83 மி.மீ. மழை பெய்த நிலையில் இப்போது 104 மி.மீ. பதிவாகி உள்ளது. இன்னும் சில நாள்களில் கூடுதல் மழை பெய்யும் என எதிர்பார்க்கலாம்.

சடயநேரி கால்வாயில் 9.7 அடி இருந்தால் மட்டுமே பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என்பதால் விரைவில் இந்த கால்வாயில் தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது.

100 சதவீத மானியத்துடன் கூடிய சொட்டு நீர்ப் பாசன வசதியை இதுவரை 70 விவசாயிகள் பெற்றுள்ளனர்.

மேலும், மாவட்டத்தில் பரிசோதனை முறையில் விவசாயக் குழுக்கள் அமைக்கப்பட்டு எட்டயபுரம் பகுதியில் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. விரைவில் உடன்குடியில் முருங்கை சாகுபடி செய்யவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் கே.பி. பெருமாள் பேசுகையில், கடந்தாண்டு வறட்சி நிவாரணத் தொகை வழங்கியதில் சில குழப்பங்கள் இருந்தன. இப்போது மழை குறைந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளதால் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. எனவே வறட்சியால் பாதிக்கப்படும் பயிர்கள் குறித்து முறையான ஆய்வு மூலம் கண்டறியப்பட வேண்டும் என்றார்.

உடன்குடியில் கொப்பறை தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயி ஒருவர் கேள்வி எழுப்பியபோது, இதுகுறித்து அரசுக்கு உரிய பரிந்துரை செய்யப்படும் என ஆட்சியர் தெரிவித்தார். மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர் மாவட்டத்தில் உடன்குடி, சாத்தான்குளம், திருச்செந்தூர் பகுதிகளில் தென்னை மரங்கள் பட்டுப்போன நிலையில் இருப்பதை நானே நேரில் பார்த்துள்ளதால், இதுதொடர்பாக முறையான ஆய்வு நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என வேளாண் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றார்.

மருதூர் அணையில் இருந்து தண்ணீர் எடுக்கும் 4-வது பைப் லைன் திட்டத்தை கைவிட வேண்டும் என சில விவசாயிகள் வலியுறுத்தியபோது இதுதொடர்பாக விவசாயிகளின் கோரிக்கைகள் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை கட்டி மழைக்காலங்களில் வீணாகும் நீரை சேமிக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

ஜெயச்சந்திரன்: விவசாயிகளின் வாரிசுகள் மேற்படிப்பு படிப்பதற்கான கல்விக் கடனை தாமதமின்றி வழங்க வேண்டும். ராங்கியம் கிராமத்தில் இருளர் இன மக்களுக்கு மயான வசதி ஏற்படுத்தி தர வேண்டும். ஆண்டிமடம் பகுதியில் நிலவும் அதிக நேர மின்வெட்டு பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்.

பிச்சைப்பிள்ளை: கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை அமைத்தால் மழைக் காலங்களில் வீணாகும் தண்ணீரை சேமிக்கலாம். புள்ளம்பாடி வாய்க்காலில் கூடுதலாக தண்ணீர் திறக்க வேண்டும்.

செந்துறை வட்டம், மருவத்தூர் சோழன்குடிக்காட்டில் பழுதாகியுள்ள மின் மோட்டாரை சரி செய்து, குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அரியலூர் நகரில் நகராட்சி சார்பில் கொசு மருந்து தெளிக்கப்படவில்லை.

அரியலூர் பேருந்து நிலைய வெளிப்பகுதியில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். அரியலூர் அரசு மருத்துவனையில் தண்ணீர் சுகாதாரமாக இல்லை. அங்கு கொள்ளிட குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்.

கூட்டத்தில், மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீவ் 6 விவசாயிகளுக்கு தலா ரூ. 850 வீதம் ரூ. 5100 மதிப்பிலான ஒட்டுரக பூசணி மற்றும் வெண்டை விதைகளையும், விவசாய கையேடுகளையும் வழங்கி ஆட்சியர் பேசியது:

நடப்பு சம்பா பருவத்துக்கு 285 டன் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. யூரியா, பொட்டாஷ் உள்ளிட்ட உரங்கள் தேவையான அளவு கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் சிறுதானிய இயக்கத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.44.74 லட்சம் ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சிறு தானிய உற்பத்தியை பிரபலப்படுத்த செயல்விளக்கம் அமைக்க ஹெக்டேருக்கு சோளத்துக்கு ரூ. 3 ஆயிரமும், வரகுக்கு ரூ. 2 ஆயிரமும் வழங்கப்படுகிறது என்றார்.

மாவட்ட வருவாய் அலுவலர் கருப்பசாமி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் முருகன், வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் சுப்பையா, வேளாண் உதவி இயக்குநர் மல்லிகா, விவசாய சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாய சங்கத்தினர் உண்ணாவிரதம்**

கொடுமுடி வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றக்கோரி, கரூர் மாவட்டம் தரகம்பட்டியில் விவசாய சங்கத்தினர் வெள்ளிக்கிழமை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், உழவர் உழைப்பாளர் கட்சி, தமிழக விவசாயிகள் நல சங்கம், தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில், தரகம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற போராட்டத்துக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்க கரூர் மாவட்டத் தலைவர் வி.கே. தங்கவேல் தலைமை வகித்தார்.

மழைக்காலங்களில் உபரியாக கடலில் கலக்கும் நீரை, கொடுமுடி, ஜோடர்பாளையம் அணையிலிருந்து வாய்க்கால் வெட்டி கரூர் மாவட்டப் பகுதியில் உள்ள பல்வேறு ஏரி, குளங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

மேலும் விராலிமலை, இலுப்பூர், அன்னவாசல், புதுக்கோட்டை, நெப்பிலி, கோரை, அக்கினி ஆறுகள், தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, விறுசுளி ஆறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு உள்ளிட்ட ஆறுகளுடன் இணைத்து நிலத்தடி நீரை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்த, கொடுமுடி வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றக்கோரி விவசாய சங்கத்தினர் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியது:

மனிதன் தன் தேவைக்காக காடுகள் அளிக்கிறான். இதனால் மழை பொழிவு குறைந்து, தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது.

நீர் இல்லையென்றால் விவசாயிகள் விவசாயத்தை காப்பாற்ற முடியாத நிலை ஏற்படும். இயந்திரங்கள் மூலம் தொழில் செய்ய பல கோடி மதிப்பிலான திட்டங்கள் அரசு மூலம் கொண்டு வரப்படுகிறது. எனினும் இதனால் பெரிய அளவில் லாபங்கள் ஈட்டமுடியவில்லை. இந்தியா ஜனநாயக நாடு எனக்கூறும் அரசியல் வாதிகள், விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதில்லை.

தேர்தலின் போது அரசியல்வாதிகள் பல சாகச வார்த்தைகளை கூறி ஓட்டு கேட்கின்றனர். விவசாயிகளின் வாக்குகளை பெற்று வெற்றிபெறும் அரசியல் வாதிகள், சட்டபேரவையில் விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து தெரிவிக்க வேண்டும். விவசாயிகள் நீரின் அவசியம் குறித்து வளர்ந்து வரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் நேரடியாகச் சென்று விளக்க வேண்டும். தண்ணீருக்காக போராட்டம் நடத்தி அரசுக்கு தங்கள் தேவைகள் குறித்து தெரிவிக்க வேண்டும் என்றார்.

இதில், தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் என். பாலகிருஷ்ணன், உழவர் உழைப்பாளர் கட்சியின் மாவட்ட செயலர் சி.பி. ஆறுமுகம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலர் ஏ. தாமரைச்செல்வன், மாவட்டக்குழு உறுப்பினர் பி. ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலர் எம். சேஷன் போராட்டத்தை தொடக்கி வைத்தார். மாவட்ட செயலர் கே.கே. பெரியசாமி முடித்து வைத்தார்.

**வேளாண்மை துறை திட்ட பணிகள் ஆய்**

புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் அறந்தாங்கி வட்டாரத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்ட பணிகளை வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

கருவிடைச்சேரி கிராமத்தில் இயந்திரத்தின் மூலம் நடவு செய்துள்ள தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் செயல்விளக்கத்தின்படி 10 ஏக்கர் பரப்பில் இரண்டாவது களை எடுக்கும் தருணத்தில் ஒரு தூருக்கு 45 சிம்புகள் இருப்பதை நேரடியாக எண்ணி ஆய்வு செய்தார்.

அதேபோல், கூத்தாடிவயல் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வீரப்பன் மகன் ராஜா வயலில் 1 ஹெக்டேர் பரப்பில் துவரை செயல்விளக்கத்தை பார்வையிட்டார்.

நற்பவளக்குடி கிராமத்தில் ராமன் வயலில் பயிர் மதிப்பு ஆய்வு பரிசோதனை திடலையும் அதே கிராமத்தில் 5 ஏக்கர் பரப்பில் விதைப்பண்ணை அமைந்துள்ள இடத்தையும், இராமலிங்கத்தின் வயலில் 1 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர பூச்சி புலனாய்வு திடலில் அமைக்கப்பட்டுள்ள மைக்ரோ பிளாட்டை ஆய்வு செய்து சுற்றுப்புற சூழலை பாதுகாப்பது பற்றியும் பூச்சி நோய் கண்காணிப்பு விழிப்புணர்வு பற்றியும் விவசாயிகளிடம் கலந்துரையாடினார்.

பரவாக்கோட்டை கிராமத்தில் பழனியப்பன் வயலில் கரும்பு 2 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி திடலுக்கு ரூ. 25 ஆயிரம் மதிப்புள்ள திரவநிலை உரம் விவசாயிகளிடம் வழங்கியதை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குநர் வே. பொன்னையா, வேளாண்மை துணை அலுவலர் குருநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**விவசாயிகள்குறைதீர் கூட்ட தேதி மாற்றம்**

தஞ்சாவூரில் நவ. 29-ம் தேதி நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நவ. 27-ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நவ. 29-ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. இந்தக் கூட்டம் நிர்வாகக் காரணங்களுக்காக நவ. 27-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும்

**கால்நடை இறப்பு, பயிர் இழப்புக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை**

நாகை மாவட்டத்தில் கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கும், புயல் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்டச் செயலர்

எம். செல்வராசு, நாகை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கோரிக்கை மனு விவரம்:

இயற்கை சீற்றங்களால் விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கோமாரி நோய் தாக்குதல் காரணமாக நாகை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான மாடுகள், ஆடுகள் இறந்துள்ளன. இந்த நிலையில், வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, நாகை மாவட்டத்தில் கரையைக் கடந்த போது ஏற்பட்ட சூறாவளிக் காற்றில், வாழை, கொய்யா, கரும்பு உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளன. கடைமடை பகுதிகளில் சம்பா நெல் பயிர்களும் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன.

கால்நடைகள் இறப்பு மற்றும், தோட்டப் பயிர்கள் இழப்பு ஆகியவற்றை உரிய வகையில் கணக்கிட்டு, விவசாயிகளுக்கு உரிய இழப்பீடுகள் வழங்கி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும் என மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**மானியத்தில் கருவிகள் பெற விண்ணப்பிக்கலாம்**

பாசன நீரை சேதாரமின்றி பயன்படுத்த தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள், தெளிப்பு நீர் கருவிகள், மழை தூவான்கள் மானியத்தில் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து நீடாமங்கலம் வேளாண் உதவி இயக்குநர் ந. இளஞ்செழியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நீடாமங்கலம் வட்டாரத்தில் விவசாயிகள் உளுந்து, பச்சைபயறு, சோயா, துவரை,நிலக் கடலை, எள் சாகுபடி செய்ய தயாராகி வருகின்றனர். கோடைக்காலங்களில் குறைவான நீரைக் கொண்டு அதிக அளவில் சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக கருவிகள் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்படவுள்ளன.

கிடைக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்தவும், பயன்படுத்தும் நீர் விரையமின்றி முழு அளவில் பயிர்களுக்கு கிடைக்கும் உதவிடும் பாசன கருவிகள் 50 சதவிகித மானியத்தில் (அதிகபட்சமாக ரூ. 15 ஆயிரம் வரை மானியம்).

தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள், தெளிப்பு நீர் கருவிகள், மழை தூவான் ஆகியவை வழங்கப்படவுள்ளன. தேவைப்படும் விவசாயிகள் ஒரு எக்டேருக்கு குறையாமல் உளுந்து, பயறு, சோயா, நிலக்கடலை, எள் சாகுபடி செய்திருக்க வேண்டும். இந்த கருவிகள் பெற விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோமாரி நோய்: வேப்பிலைப்பட்டியில் மாடுகள் சாவு**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வேப்பிலைப்பட்டி கிராமத்தில் கோமாரி நோய்த் தாக்குதலால் மாடுகள் தொடர்ந்து இறக்கின்றன. இங்கு கடந்த வாரம் மட்டும் 20க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்தன.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை மேலும் நான்கு மாடுகள் உயிரிழந்தன. கோமாரி நோய்த் தாக்குதலுக்கு மாடுகள் தொடர்ந்து இறப்பதால், வேப்பிலைப்பட்டி கிராம மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

**அரூரில் இன்று பாஜக விவசாய அணி ஆலோசனைக் கூட்டம்**

அரூரில் பாஜக விவசாய அணியின் ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை (நவ.23) நடைபெறுகிறது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் விவசாய அணி மாநில துணைத் தலைவர் ஆர்.ஏ.வரதராஜன், மாவட்டச் செயலர் கே.குழந்தை ரவி ஆகியோர் வெள்ளிக்கிழமை கூறியது:

சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தாக்குதல் அதிகம் உள்ளது. அரசு கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இந்த மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

கரும்பு விவசாயிகளிடம் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பிரீமியம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மழை, கோடை வெயிலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரையிலும் ஒருவருக்கு கூட இழப்பீடு வழங்கப்படவில்லை.

இதுகுறித்து பாஜக விவசாய அணி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை (நவ.23) நடைபெறுகிறது என்றனர் அவர்கள்.

**நவ.27-இல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் புதன்கிழமை (நவ.27) நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அன்று காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில், மாவட்ட விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளை நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெட்டை, சௌகாட் ரக தென்னை கன்றுகள் விற்பனைக்குத் தயார்**

மேற்குக் கடற்கரையிலுள்ள நெட்டை, செப்காட் இளநீர் ரக தென்னை மரக்கன்றுகள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

இதுகுறித்து அந்த நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மேற்குக் கடற்கரை நெட்டை தென்னைக் கன்றுகள் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியவை. கொப்பரைக்கு மிகவும் உகந்த இந்தக் காய்களில் 68 முதல் 71 சதம் எணணெய் உள்ளது. ஒரு டன் கொப்பரை எடுக்க சுமார் 5000 முதல் 7000 வரை காய்கள் மட்டுமே தேவைப்படும் என்று கேரளத்திலுள்ள மத்திய தென்னை ஆராய்ச்சி நிலையம் சான்றளித்துள்ளது.

அதேபோல, செப்காட் ரக தென்னைக் கன்றுகள் இளநீருக்காக வளர்க்கப்படும் சிறப்பான ரகமாகும். இவற்றில் இளநீரின் அளவு அதிகமாக இருப்பதுடன் நுண்ணூட்டச்சத்துக்களும் அதிகளவில் உள்ளன.

இந்த இரு ரக தென்னைக் கன்றுகள் மழைக் காலத்தில் நடவு செய்ய ஏற்றதாக உள்ளதால் தங்கள் பண்ணைகளில் தென்னை நடவு செய்ய விரும்பும் விவசாயிகள், பண்ணையாளர்கள் நெட்டை, சௌகாட் ரக தென்னைக் கன்றுகளை நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

தேவைக்கு ஏற்ப 6 முதல் 8 மாதம் வரை வளர்ச்சியடைந்த தென்னைக் கன்றுகள் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

மேலும் விவரங்களுக்கு 04286 - 266345, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்துக்குப் பாராட்டு**

போளூரை அடுத்த களம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் கடந்த 13 ஆண்டுகளாக லாபத்தில் இயங்குவதை பாராட்டி கேடயத்தை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் அண்மையில் வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 60வது அனைந்திந்திய கூட்டுறவு வாரவிழா நடைபெற்றது. இந்த விழாவில் போளூர் தாலுகாவில் உள்ள 24 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கங்கள் கலந்துகொண்டன. இந்த கூட்டுறவு கடன் சங்கங்களில் களம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் கடந்த 13 ஆண்டுகளாக லாபத்தில் செயல்பட்டு வருவதால் இந்த கூட்டுறவு கடன் சங்கத்தை சிறந்த சங்கமாக தேர்வு செய்து அதன் தலைவர் பெ.ராஜேந்திரனிடம் கேடயத்தை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் வழங்கினார்.

மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் கனகராஜி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் அமுதா அருணாசலம், சங்கச் செயலாளர் மீனாட்சி சுந்தரம், காசாளர் பரசுராமன் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**ரேலியா அணையின் நீர்மட்டம் 16 அடி!**

குன்னூரின் முக்கிய நீராதாரமாக உள்ள ரேலியா அணையின் நீர் மட்டம் 16 அடி உயரத்தை எட்டியது .

மழை பொய்த்துப் போனதால், கடந்த 6 மாதங்களுக்கு முன் இந்த அணை வறண்டது. இதனால் குன்னூரில் கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டது. இதன் காரணமாக, ஒரு குடம் குடிநீர் ரூ.10 முதல் ரூ.15 வரை விலைக் கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

இந்த வறட்சியைப் பயன்படுத்தி, ரேலியா அணையை குன்னூர் நகராட்சி நிர்வாகம் தூர்வாறும் பணியை மேற்கொண்டது. இந்தப் பணி கடந்த 3 மாதங்களுக்கு முன் முடிவடைந்தது. அப்போது பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவ மழைப் பொய்த்துப் போனதால், குன்னூரில் உள்ள நீராதாரங்கள் வறட்சியுடனேயே காணப்பட்டது. இதன் காரணமாக வரலாறு காணாத குடிநீர் தட்டுப்பாடு குன்னூரில் ஏற்பட்டது.

இந் நிலையில், கடந்த சில நாள்களாக குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வந்தது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி, அணையின் நீர் மட்டம் 16 அடியாக உயர்ந்தது.

வடகிழக்கு பருவமழை தீவரமடைந்தால், அணை தனது முழு கொள்ளளவான 43 அடியை எட்டிவிடும் என்றும், வரும் கோடைக் காலத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் நகரமன்றத் தலைவர் சி.கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

**மதுரை விமான நிலையத்தில் மல்லிகைப் பூ விற்பனை நிலையம்**

மதுரை விமான நிலையத்தில், மல்லிகைப் பூ விற்பனை நிலையத்தை, மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

மதுரை விமான நிலையத்தின் டெர்மினல் கட்டடத்தில், மதுரைக்கு பெருமை சேர்க்கும் மல்லிகைப் பூ விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதைத் திறந்துவைத்து, செய்தியாளர்களிடம் அமைச்சர் தெரிவித்தது: மதுரையில் மீனாட்சி அம்மனுக்கு அடுத்தபடியாக பிரசித்திபெற்றது மல்லிகைப் பூ. இதனை, வெளிநாட்டினர் வாங்கும்வண்ணம் விற்பனை நிலையத்தை விமான நிலையத்தில் அமைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

காலையில், சிவகாசியில் உள்ள பட்டாசு தயாரிப்பாளர்களிடம் பட்டாசை உலக சந்தைக்கு கொண்டு செல்லவேண்டும் என்றேன்.

அதேபோல், மதுரை மல்லிகைப் பூ வையும், பழ வகைகளையும் உலக சந்தைக்கு கொண்டு செல்ல தொழில் வர்த்தக சங்கத்தினர் முயற்சிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், தொழில் வர்த்தக சங்கத்தின் முதுநிலைத் தலைவர் எஸ். ரத்தினவேலு, தலைவர் ஜெகதீசன், வர்த்தக சங்கத்தினர் எஸ். நாகரத்தினம், ராஜேந்திரன், கார்த்திகேயன், விமான நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரி சங்கையாபாண்டியன் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

விமான நிலையத்தில் 2 மீட்டர் மல்லிகைப் பூ ரூ. 100 என தற்போது விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, அங்கிருந்த விற்பனையாளர்கள் தகவல் தெரிவித்தனர்.

**பயிர்க் காப்பீடு: பிரீமியம் பெற மறுக்கும் கூட்டுறவு சங்கங்கள்**

பயிர்க் காப்பீட்டுக்கான பிரீமியம் பெற தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மறுத்து வருவதாக, விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் எல். சுப்பிரமணியன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் லோ. சிற்றரசு, வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் பழனிவேலு உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

பயிர்க் காப்பீடு செய்வதற்கான பிரீமியம் தொகை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கங்களில் கடன்பெறும் விவசாயிகள், கடன் பெறாத விவசாயிகள் பிரீமியம் தொகையை செலுத்தி வந்தனர்.

ஆனால், இப்போது கடன் வழங்கும்போது பயிர்க் காப்பீட்டுக்கான இன்சூரன்ஸ் தொகையைப் பெற மறுக்கின்றனர் என்று, கரும்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பழனிசாமி குறிப்பிட்டார். இது தொடர்பாக விவசாயிகள் பலரும் கூட்டத்தில் முறையிட்டனர்.

இதற்குப் பதிலளித்த கூட்டுறவுத் துறை அதிகாரிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு இதுவரை பிரீமியம் வசூலிப்பதற்கான அறிவிப்பாணையை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனம் அளிக்கவில்லை என்று தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து பேசிய ஆட்சியர், உடனடியாக மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் அறிவிப்பாணையை அனுப்புமாறு காப்பீட்டு நிறுவன பிரதிநிதிக்கு அறிவுறுத்தினார். நடப்பு பருவத்துக்கு பயிர்க் கடன் பெறும் விவசாயிகள் வரும் டிசம்பர் 15 ஆம் தேதி வரையிலும், கடன் பெறாத விவசாயிகள் டிசம்பர் 31 ஆம் தேதி வரையிலும் காப்பீடு செய்து கொள்ளலாம் என்றும் ஆட்சியர் குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து, கடந்த பருவத்தில் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகள் பலருக்கும் இதுவரை இழப்பீடு கிடைக்கவில்லை எனப் புகார் தெரிவித்தனர். மதுரை மாவட்டத்தில் 8,450 விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்துள்ளனர். இவர்களில், 5,700 பேருக்கு மொத்தம் ரூ.2.37 கோடி இழப்பீடு வழங்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இத் தொகை, அவரவர் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும் என காப்பீட்டு நிறுவன பிரதிநிதி குறிப்பிட்டார்.

மதுரை மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், காப்பீடு செய்தவர்களில் 60 சதவீதத்தினர் மட்டுமே இழப்பீடு கிடைக்க தகுதி பெற்றுள்ளனர் எனக் கூறுவது ஏற்புடையதல்ல என விவசாயிகள் ஆட்சேபம் தெரிவித்தனர். தொடர்ந்து பேசிய ஆட்சியர், பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். வறட்சி காரணமாக கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட குறுகிய கால கடனை, மத்திய கால கடனாக மாற்றி அரசு சலுகை அளித்துள்ளது. கடன் தவணை செலுத்துவதற்கான காலஅவகாசம் இருக்கும் நிலையில், பயிர்க் காப்பீட்டுக்கு கிடைத்துள்ள இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்காமல் கடனுக்கு

வரவு வைக்கின்றனர். இதனால், அரசு அறிவித்த சலுகையின் பயன் கிடைக்காமலேயே போய்விடுகிறது என்று விவசாயிகள் முறையிட்டனர்.

இப்புகாருக்கு பதிலளித்துப் பேசிய ஆட்சியர், இழப்பீடு தொகையை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்குமாறு அறிவுறுத்தினார்.

**விவசாயிகள் சங்க மாநாட்டு குழு கூட்டம்**

கால்நடைகளை தாக்கி அழித்து வரும் கோமாரி நோயை, ஆரம்பத்திலேயே தடுக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக் குழு கூட்டம், மாவட்டத் தலைவர் குருசாமி தலைமையில், மல்லாங்கிணறில் நடைபெற்றது. மாவட்டச் செயலர் விஜயமுருகன் வரவேற்றார்.

மாநில துணைச் செயலர் சுருளிநாதன் பேசினார். காரியாபட்டி ஒன்றிய செயலர் அம்மாசி நன்றி கூறினார். கால்நடைகளை கோமாரி நோய் தாக்கி வருகிறது. ஆரம்பத்திலே இந்நோயை கட்டுப்படுத்த, போர்க்கால அடிப்படையில் தடுப்பூசி போட, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நோய்த் தாக்கி இறந்த கறவை மாடுகளுக்கு ரூ.25 ஆயிரம், சினை மாடுகளுக்கு ரூ.20 ஆயிரம், சாதாரண மாடுகளுக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பயிர்களை நாசம் செய்யும் வன விலங்குகள்**

விளைபயிர்களை நாசம் செய்யும் காட்டு விலங்குகளால் விவசாயிகள் நஷ்டமடையும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி தலைமை வகித்தார். வேளாண்மை துறை இணை இயக்குநர் சுப்பையா, நேர்முக உதவியாளர்

முருகதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் விவசாயிகள், அதிகாரிகளிடையே நடந்த விவாதம் வருமாறு:

விஜயமுருகன் (மாவட்ட விவசாயிகள் சங்கம்): விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகள் பயனடையும் வகையில் விரைவு பட்டா மாறுதல் முகாம் நடத்துவதற்கு அரசு உத்தரவிட்டு சிறப்பாக நடந்து வருகிறது. கிராம நிர்வாக அலுவலர்கள் மனுக்களை பரிசீலனை செய்யாமல் தாமதம் செய்து வருகின்றனர். எவ்வித முன்னறிவிப்புமின்றி மும்முனை மின்சாரம் நிறுத்தப்படுகிறது. பின்னர் எப்போது வரும் என காத்திருக்க வேண்டியுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் இரவு நேரங்களில் விலங்குகளின் நடமாட்டம் இருக்கிறது. எனவே விவசாயிகள் பயனடையும் வகையில் பகலில் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.

ராமசாமி (வட்டார விவசாயிகள் சங்கம்): காரியாபட்டி, அருப்புக்கோட்டை, வத்திராயிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் நிலக்கடலை, மக்காச்சோளம், சோளம், பயறு வகைகள், வெங்காயம் பயிரிட்டுள்ள விளைநிலங்களில் காட்டுப்பன்றி, மான்கள், மயில்கள் கூட்டம் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன. பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இப்பகுதியில் 15 ஆயிரம் மாடுகள், அதிகளவிலான ஆடுகளும் உள்ளன. இதற்கான மேய்ச்சல் நிலங்கள் மேற்குமலை தொடர்ச்சி அடிவாரப் பகுதியில் இருந்தது. தற்போது பாதுகாக்கப்பட்ட காடுகள் என வனத்துறை கட்டுப்பாடு விதித்துள்ளது. இதை நம்பி 5 ஆயிரம் குடும்பங்கள் மேய்ச்சலுக்கு இடம் இல்லாமல் கஷ்டத்தில் உள்ளனர். இதை போக்க குறிப்பிட்ட பகுதியை மேய்ச்சலுக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

ராமசுப்பிரமணியராஜா (மா விவசாயிகள் சங்கம்): இந்த மாவட்டத்தில் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட போலி உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. இவைகளை வேளாண்மை துறை தடை செய்ய வேண்டும். ராஜபாளையம் புதுப் பேருந்து நிலையம் எதிரே கண்மாய் பகுதியில் தனியார் ஆழ்குழாய் அமைத்து நீரை எடுப்பதை தடுக்க வேண்டும்.

மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி: விவசாயிகளின் அலைச்சலை தவிர்க்கவே விரைவு பட்டா மாறுதல் நடத்தப்படுகிறது. குறிப்பிட்ட

ஆவணங்களின் அடிப்படையில் உடனே பட்டாவும் வழங்கப்படுகிறது. இம்முகாமில் பெறப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்து உடனே வழங்குவதற்கு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ராஜபாளையம், வத்திராயிருப்பு மேற்குப் பகுதியில் உள்ள மின்மாற்றிகளை மாற்றியவுடன் மும்முனை மின்சாரம் பகலில் தொடர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 41 வகையான உரங்கள் மற்றும் 219 வகையான பூச்சிக் கொல்லி மருந்துகள் உள்ளன. போலியான மருந்துகள் மற்றும் உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக வந்த புகார் ஆய்வு செய்யப்பட்டது. இதில், 39 உர மாதிரிகள், 1800 லிட்டர் பூச்சிக் கொல்லி மருந்துகள் பறிமுதல் செய்தும், தடை விதித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ராஜபாளையம் கண்மாயில் ஆழ்குழாய் அமைத்துள்ள தனியார் குறித்து வட்டாட்சியர் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அசோக்குமார் (கோட்ட வனப்பாதுகாவலர்): காட்டு விலங்குகளால் சேதம் அடைந்த பயிர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்படும். பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இருந்தும் மாவட்ட நிர்வாகத்தின் நடவடிக்கையால் குறிப்பிட்ட பகுதிகள் மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் மாவட்ட மண்டல இணைப் பதிவாளர் குருமூர்த்தி, வேளாண்மை துணை இயக்குநர் மணிசேகரன் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

**அந்தமான் அருகில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை**

வங்கக் கடலில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த ஹெலன் புயல் ஆந்திர மாநிலத்தில் கரையைக் கடந்தது. இந்த நிலையில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது.இந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழகத்தை நெருங்கி நகர்ந்து வந்தால் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ சனிக்கிழமை பெய்யும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும். இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை

வரையிலான 24 மணி நேரத்தில் சிவகிரியில் 90 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. கோவில்பட்டி, புதுச்சேரியில் 40 மி.மீ. மழையும், திண்டிவனம், தக்கலையில் 30 மழையும் பதிவாகியுள்ளது.

உத்திரமேரூர், குழித்துறை, மணியாச்சி, நாகர்கோவில், கடலூர், பேச்சிப்பாறை (20 மி.மீ.), மதுராந்தகம், வந்தவாசி, பூதபாண்டி, மரக்காணம், ஸ்ரீவைகுண்டம், குளச்சல், வால்பாறை, விளாத்திகுளம் (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**சென்னையில் பூக்கள் விலை கடும் வீழ்ச்சி**



சென்னையில் பூக்களின் விலை கடுமையாக சரிந்துள்ளது. திருமணம் மற்றும் சபரிமலைக்கு ஐயப்ப பக்தர்கள் மாலை அணியும் இந்த சீசனில் பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சென்னை கோயம்பேட்டில் உள்ள பூ மார்க்கெட்டுக்கு மதுரை, திண்டுக்கல், ஊட்டி மற்றும் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தினமும் லாரி உள்ளிட்ட வாகனங்கள் மூலம் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன.

பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக அவற்றை பொதுமக்கள் வாங்கிச்செல்கின்றனர்.

பண்டிகை உள்ளிட்ட விழாக்கள் தொடர்ந்து வந்ததால் கடந்த மாதங்களில் பூக்களின் விலை அதிகரித்து காணப்பட்டது.

அதிகபட்சமாக ஒரு கிலோ மல்லிகை ரூ.800 வரையிலும், கனகாம்பரம் ரூ.900 வரையிலும் விற்பனையானது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை (நவ.22) அனைத்து பூக்களின் விலையிலும் கடும் சரிவு காணப்பட்டது. சில பூக்களின் வரத்து குறைவாக இருந்தபோதும் விலையும் குறைவாகவே இருந்தது.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி பூக்களின் விலை விவரம் கிலோவில் (பழைய விலை அடைப்புக்குறிக்குள்) மல்லி- ரூ.400 (800), ஜாதிமல்லி-300 (450), அரளி-50 (70), சாமந்தி ரூ.40 (80), ரோஜா-30 (55), ஃபைவ் ஸ்டார் ரோஜா- ரூ.50(75), சம்பங்கி-ரூ.50(90), செண்டுமல்லி-ரூ.10(25)

இது குறித்து கோயம்பேடு மார்க்கெட் பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் அருள்விசுவாசம் கூறியது:

செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் சரஸ்வதி பூஜை, விஜயதசமி, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளும் கோயில் விழாக்களும் தொடர்ந்து வந்ததால் பூக்களுக்கான தேவையும் அதிகமாக இருந்தது. இதனால் அவற்றின் விலை, கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிகமாக இருந்தது.

ஆனால் இந்த மாதம் முகூர்த்த தினங்கள் மற்றும் கோயில் விஷேச தினங்கள் மிகக் குறைவாக உள்ளதால் பூக்களுக்கான தேவையும் குறைந்துவிட்டது. மேலும் வழக்கமாக நவம்பர் மாத இறுதியில் வளர்பிறையில் வரும் கார்த்திகைத் தீபத் திருவிழா இந்த ஆண்டு முன்கூட்டியே கொண்டாடப்பட்டுவிட்டது.

வழக்கமாக மல்லிகை மற்றும் முல்லை 20 டன்னும், ரோஜா 50 டன்னும் விற்பனைக்காக கொண்டுவரப்படுவது வழக்கம். ஆனால் தற்போது இவற்றின் வரத்து பாதியாகக் குறைந்து விட்டது. டிசம்பர் மாதத்தில் பூக்களின் விலை சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

**பாலாற்றில் தடுப்பணை: விவசாயிகள் கோரிக்கை**

பாலாற்றில் உடனடியாக தடுப்பணைக் கட்ட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமையில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற்றது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், நடைபெற்ற வாதம்: விவசாயி திருவேங்கடம்: பாலாற்று, விவசாயிகளை காக்கும் வகையிலும், வாயலூர், திருமுக்கூடல், பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் தடுப்பணைக் கட்ட வேண்டும் என்று விவசாயிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகிறோம்.

3 போகம் விவசாயம் நடைபெற்று வந்த இந்த பூமியில் அது 2 போகமாக குறைந்து, தற்போது 1 போகம் விவசாயம்தான் நடைபெறுகிறது.

ஆட்சியர்: உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருவேங்கடம்: விவசாயிகளின் வாரிசுகள் படித்துவிட்டு நல்ல வேலை கிடைக்காமல் இருக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே விவசாயிகளின் வாரிசுகளுக்கு நல்ல வேலை கிடைக்கச் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆட்சியர்: மாவட்ட வேலைவாய்ப்புப் பயிற்சி மையம் மூலம் விவசாயிகளின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு குறித்த சிறப்பு முகாம் நடத்தப்படும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பிரதிநிதி லாரன்ஸ்: காஞ்சிபுரம் புறவழிச் சாலைக்காக விவசாயிகளின் 5,700 சதுரமீட்டர் நிலம் 2006-இல் கையகப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த நிலத்தை கையகப்படுத்தியதற்காக உரிய நிவாரணம் இன்னும் வந்து சேரவில்லை. இதனால் 89 விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். காஞ்சிபுரம் வெள்ளைகுளம் பகுதியில் ஒரு பகுதி மக்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

மற்றொரு பகுதி மக்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. இது குறித்து உரிய விசாரணை நடத்தி விரைந்து பட்டா வழங்க வேண்டும்.

ஆட்சியர்: புறவழிச் சாலை அமைக்க இடம் வழங்கிய விவசாயிகளுக்கு உடனடியாக உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் ஒரு இடத்துக்கு பட்டா வழங்க வேண்டும் என்றால், முதலில் அந்த இடம் நீர்ப் பிடிப்புப்

பகுதியாக இருக்கக் கூடாது. இது போன்ற பிரச்னை இல்லாமல், எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருவேங்கடம்: உத்தரமேரூர் பகுதியில் உள்ள கரும்பு விவசாயிகள், தங்களது விளை கரும்புகளை, பழையசீவரம், தனியார் சர்க்கரை ஆலைக்குத்தான் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் நாங்கள் பல ஆண்டுகளாக மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில்தான் வழங்கி வந்தோம். எனவே கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எங்களது கரும்புகளை வழங்க உத்தரவிட வேண்டும்.

ஆட்சியர்: உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி வழங்க வேண்டும். கால்நடை மருத்துவர் இல்லாத இடங்களில் உடனடியாக மருத்துவர்களை நியமிக்க வேண்டும். டெங்கு உள்ளிட்ட காய்ச்சலுக்கு உரிய மருந்து, மாத்திரைகளை இருப்பில் வைத்திருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு புகார்களை வழங்கனர். இவ்வாறாகக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார், கால்நடைப் பராமரிப்புத் துறை துணை இயக்குநர் கோவர்த்தனன், வேளாண் இணை இயக்குநர் செப்ந்தரராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### பயிர்ச் சேதம்: இழப்பீடு வழங்கக் கோரி வனத்துறையினரின் வாகனம் சிறைபிடிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி அருகே காட்டு யானைகளால் சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வலியுறுத்தி, வனத் துறையினரின் வாகனங்களை விவசாயிகள் வெள்ளிக்கிழமை சிறைபிடித்தனர்.

கர்நாடக வனப் பகுதியிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் கிருஷ்ணகிரி மாவட்ட வனப் பகுதிகளில் புகுந்தன. அவை பல குழுக்களாகப் பிரிந்து மலையடிவார கிராமங்களிலுள்ள விளைநிலங்களில் பயிரிடப்பட்டுள்ள நெல், கரும்பு, ராகி உள்ளிட்ட பயிர்களை சூறையாடி வருகின்றன.

சூளகிரி அருகே போடூர்பள்ளம் வனப் பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக 44 யானைகள் சுற்றித் திரிகின்றன. இரவு நேரங்களில் அவை விளைநிலங்களில் புகுந்து ராகி, தக்காளி, வாழை, நெல் உள்ளிட்ட பயிர்களை தின்றும், மிதித்தும் சேதப்படுத்தி வருகின்றன.

இந்த யானைகளை கர்நாடக வனப் பகுதிக்கு விரட்டும் பணியில் ஒசூர் கோட்ட வனத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், யானைகள் சாணமாவு வனப் பகுதி வரை சென்று விட்டு, மீண்டும் போடூர்பள்ளம் வனப் பகுதிக்கு திரும்பி விடுகின்றன.

இந்த நிலையில், போடூர்பள்ளம் பகுதிக்கு வனத் துறையினர் வந்த அரசு வாகனத்தை விவசாயிகள் வெள்ளிக்கிழமை சிறைபிடித்தனர்.

யானைகளால் சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்.

யானைகள் விவசாய நிலங்களுக்கு வராதபடி மின்வேலி அமைக்க வேண்டும். அகழி வெட்ட வேண்டும். மீண்டும் காட்டுக்கு யானைகளை விரட்ட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர்.

தகவலறிந்த சூளகிரி போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்த விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக வனத் துறையினர் உறுதியளித்ததையடுத்து விவசாயிகள் வாகனங்களை விடுவித்தனர்.

போடூர்பள்ளத்தில் வனத் துறையினரின் வாகனத்தை சிறைபிடித்த கிராம மக்கள்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.11.2013**

## ஆந்திராவில் இருந்து வரத்து அதிகரிப்புஉள்ளூர் குண்டு மிளகாய் விலை வீழ்ச்சி:

இளையான்குடிதமிழக சந்தைக்கு:, ஆந்திராவில் இருந்து மிளகாய் வரத்து அதிகமானதால், உள்ளூரில் விளைந்த குண்டு மிளகாய் விலை வீழ்ச்சிஅடைந்துள்ளது.

**ராமநாதபுரம்:**சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தாலுகாவில், கடந்த ஆண்டு 3,022 ஹெக்டேரிலும், ராமநாதபுரம் மாவட்டம் ஆர்மங்கலம்.எஸ். ஒன்றியம், நயினார்கோவில், சாயல்குடி பகுதிகளில், 15 ஆயிரம் ஹெக்டேரிலும், 'ராம்நாடு முண்டு' என்று அழைக்கப்படும், குண்டு மிளகாய் அதிக அளவில் பயிரிடப்பட்டது. கடந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் சீசனில் 1 கிலோ 100 முதல் 120 ரூபாய் வரை விற்பனையானதுமேலும் விலை உயரும் என., நினைத்து, விவசாயிகள் மிளகாயை இருப்பு வைத்தனர்இந்த ஆண்டு ., நெல் விவசாயத்தை கைவிட்டு, அதிகளவில் மிளகாய் பயிரிட்டு உள்ளனர்.

## கோமாரி நோய் பரவல் தடுக்க அதிரடி 4 சந்தைக்கு தஞ்சை கலெக்டர் தடை

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில், இடப்பெயர்ச்சியால் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்குதல் உண்டாவதை தடுக்கும் வகையில், 4 சந்தைகளுக்கு தற்காலிக தடைவிதித்து, கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்தமிழகத்தில் ., டெல்டாவில், நாகையில் கால்நடைகளுக்கு முதன்முதலில் கோமாரி நோய் பாதிப்பு தென்பட்டது. இதைத்தொடர்ந்து, 60 கி.மீ., சுற்றளவில் காற்றில் பரவக்கூடிய கோமாரி நோய் வைரஸ் கிருமி மெதுவாக பக்கத்து மாவட்டங்களுக்கும் பரவ துவங்கியதுதஞ்சை மா .வட்டத்தில், பாபநாசம், நாச்சியார்கோவில், கும்பகோணம்

பகுதியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வேகமாக பரவி, கால்நடைகள் இறந்தது.

கால்நடைகள் விற்பனைக்காக இடம்பெயர்வதால் நோய் தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதனால், கோமாரி நோய் தாக்குதலை தடுக்க அனைத்து கால்நடைகளுக்கும் உடனடியாக பரிசோதனை, உரிய சிகிச்சை அளிக்க வேண்டும்விற்பனைக்காக ., கால்நடைகள் இடப்பெயர்ச்சியை தடுக்க வேண்டும் என, கால்நடைத்துறை டாக்டர்கள் அறிவுறுத்தினர்.

இதையடுத்து, தஞ்சை கலெக்டர் சுப்பையன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தஞ்சை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் கிளர்ச்சி ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளதுஇதுகுறித்து ., குழுக்கள் அமைத்து, நகரம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் போர்க்கால தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தஞ்சையில் வெள்ளிக்கிழமை சந்தை, பட்டுக்கோட்டையில் திங்கள்கிழமை சந்தை, திருக்காட்டுப்பள்ளியில் வியாழக்கிழமை சந்தை, திருவோணத்தில் ஞாயிற்றுக்கிழமை சந்தை என, மாடுகள் விற்பனை நடக்க சந்தைகள் கூடுகின்றன. மேற்கண்ட நான்கு சந்தைகளுக்கும் அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்தும் மாடுகள் கொண்டு வரப்படுகின்றனஇதனால் ., கிளர்ச்சி நோய் பரவும் அபாயம் அதிகம் உள்ளது.

எனவே, இத்தகைய சூழலை கவனத்தில் கொண்டு, தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை சரியாகும் வரை, தஞ்சை மாவட்டத்தில் வாரம்தோறும் கூடும், மேற்கண்ட 4 சந்தைகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு தடை விதிக்கப்படுகிறது.

எனவே, தற்காலிகமாக மேற்கண்ட சந்தைகளை கால்நடை விற்க, வாங்க பயன்படுத்த வேண்டாம் எனவும் கால்நடை உரிமையாளர், விற்பனையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தமிழகத்தின் விவசாய முறையை அறிந்து கொள்ள வெளிநாட்டு விவசாயிகள் ஆர்வம்

கடையநல்லூர்: தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இயற்கை முறை விவசாயத்தை அறிந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாக வெளிநாட்டு விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பலோமா, ஸ்பெயின் நாட்டை சேர்ந்த பிரான்ஸ்சிஸ்கோ, யுவான், அமெரிக்காவை சேர்ந்த பிராங்க் ஆகியோர் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பண்ணை முறை விவசாயம், இயற்கை விவசாயம் தொடர்பான ஆய்வுகளை பார்வையிட வந்துள்ளனர். இதன்படி கடையநல்லூர் அருகேயுள்ள பண்பொழியை சேர்ந்த சங்கர் என்பவரின் பண்ணை தோட்டத்தில் வெளிநாட்டு விவசாயிகள் நான்குபேரும் பார்வையிட்டனர். அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தென்னை, மா உள்ளிட்ட விவசாயம் தொடர்பாக கேட்டறிந்தனர். தொடர்ந்து பண்ணை முறை விவசாயம் மற்றும் பண்ணை அமைப்பது குறித்து அதன் அமைப்பாளர் ஸ்பெயின்நாட்டை சேர்ந்த பிரான்ஸ்சிஸ்கோ விவசாயிகளிடம் கருத்துகளை கேட்டறிந்தார்.

மேலும் கத்தரிக்காய், பாகற்காய், பூசணி போன்ற இயற்கை விவசாய முறை மேற்கொள்வது தொடர்பாகவும் அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டும், அது பயிரிடும் முறை குறித்தும் கேட்டு அறிந்தனர். தொடர்ந்து பிரான்சிஸ்கோ கூறுகையில் : - இந்தியாவில் இயற்கை விவசாயத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் கத்தரிக்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகளை அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் அதிகளவில் உற்பத்தி செய்ய மிகுந்த ஆர்வமாக உள்ளது. இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் விவசாயம் எங்களை மிகவும் கவர்ந்துள்ளது.

விவசாயம் மேற்கொள்ளும் முறையும், எங்களை மகிழ்ச்சியடைய செய்துள்ளது. இந்த ஆய்வினை தொடர்ந்து எங்களின் நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு எந்தெந்த அடிப்படையில் இயற்கை விவசாயம் மேற்கொள்வதென்பது தொடர்பாக ஆராய்ச்சி மூலம் தெரியப்படுத்த உள்ளோம் என குறிப்பிட்டார்.

வெளிநாட்டை சேர்ந்த விவசாயிகள் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்டு வந்த விவசாய முறைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தது பண்பொழி பகுதி விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## தூத்துக்குடி மாவட்டத்தில் மானாவாரி பயிர்கள் 90 ஆயிரம் ஹெக்டேர் பயிர் வாடுவதாக விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அதிர்ச்சி தகவல்

தூதுக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் பருமழை முறையாக பெய்யாததால் மானாவாரியில் பயிர் செய்யப்பட்டுள்ள 90 ஆயிரம் ஹெக்டேர் சிறுதானியம் மற்றும் பயறு வகை பயிர்கள் கா#ந்து வருவதாக விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அதிர்ச்சி தகவல் வெளியிடப்பட்டது. தற்போது மழை பெய்யவில்லை என்றால் இந்த பயிர்கள் நிச்சயமாக தப்பாது என்றும்
வேளாண்மை அதிகாரி உறுதிபட தெரிவித்தார்.
தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் ரவிக்குமார் தலைமையில் டி.ஆர்.ஓ முத்து, பொதுப்பணித்துறை தாமிரபரணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டி முன்னிலையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி பேசியதாவது;

தூத்துக்குடி மாவட்டத்தில் கார் சாகுபடி மொத்தம் 4 ஆயிரம் ஹெக்டேரில் பரப்பில் பயிர் செ#ய

வேண்டும். ஆனால் கடந்த ஆண்டு போதிய மழை இல்லாத காரணத்தால் 2 ஆயிரத்து 480 ஹெக்டேர் பரப்பில் மட்டுமே கார்
சாகுபடி செய்யப்பட்டது.
தற்போது பிசான சாகுபடி மொத்தம் 15 ஆயிரம் ஹெக்
டேர் பரப்பில் செய்யப்பட வேண்டும். மொத்தம் தாமிரபரணி பாசனத்தின் கீழ் மொத்தம் 53 குளங்கள் உள்ளன. இதில் பாதிக்கு மேல் குளங்களுக்கு தண்ணீர் வந்துள்ளது. எல்லா குளப்பகுதிகளிலும் நெல் நடவுக்கு நாற்றங்கால் தயார் செய்யப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.
இம் மாவட்டத்தில்
சிறுதானியங்களான மக்காச்சோளம், கம்பு,
சோளம் போன்ற பயிர்கள் 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் செய்யப்பட்டு தற்போது 30 முதல் 35 நாள் பயிராக அவை இருந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு வாரமாக மழை இல்லை. மழை இல்லாத காரணத்தால் பயிர்கள் வாடிக்

கொண்டிருக்கிறது. இதே போல் பயறு வகை பயிர்களான உளுந்து, பாசிப்பயறு, தட்டப்பயறு உள்ளிட்ட பயறு வகை பயிர்கள் மொத்தம் 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்த பயிர்கள் பயிர் செய்யப்பட்டு 30 நாட்கள் ஆகிவிட்டது. இதனால் இந்த பயிர்களும் வாடிக் கொண்டிருக்கிறது. இயற்கை ஒத்துழைக்காததால் பயிர்கள் பாதிக்கும் ‹ழ்நிலை ஏற்பட்டு வருகிறது. கடந்த ஆண்டும் இதே நிலை தான் இருந்தது. கடந்த மாதம் மழை இல்லாததால் தான் பயிர்கள் வாடக்கூடிய நிலை உருவாகி வருகிறது. மழை பெய்யவில்லை என்றால் நிலைமை மோசமாகிவிடும். அரசு பல்வேறு திட்டங்களை விவசாயிகளுக்கு வழங்குகிறது. மழை இல்லாத காரணத்தால் அந்த திட்டங்களை விவசாயிகளுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இயற்கை சாதகமாக இல்லை என்றால் ஒன்றும் செ#ய முடியாது. மழை பெ#ய வேண்டும் என்று அனைவரும் வேண்டுவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

புயலுக்கே மழை இல்லை. இனிமேல் மழை வருவதற்கு வா#ப்பு இல்லை. இதனால் உடனடியாக தற்போது விவசாயிகள் தங்கள் நிலங்களில் என்ன பயிர்கள் செய்துள்ளனர் என்பதை கணக்கெடுக்க வேண்டும். விவசாயிகள் தற்போது வட்டிக்கு பணம் வாங்கி பயிர் செய்துள்ளனர்.

தற்போது அந்த பயிர்கள் மழை இல்லாததால் நாசமாகி விட்டதால் உடனடியாக அவர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு செ#ய வேண்டும். கடந்த ஆண்டு போல் முறையாக கணக்கெடுக்காமல் விடுபட்டு பிரச்னை ஏற்பட்டது போல் ஏற்படாமல் முன் கூட்டியே அதிகாரிகள் இதில் திட்டமிட்டு செயல்பட வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி பெருமாள் தெரிவித்தார். இதே போல் ஓட்டப்பிடாரம் பகுதியில் மோசமான முளைக்காத கம்பு, மக்காச் சோளம் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்றும் பெருமாள் வலியுறுத்தினார்.

விவசாயிகள் தங்கள் நிலங்களில் என்ன பயிர் செய்துள்ளனர் என்பதை முறையாக கணக்கெடுக்க வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறினார். இதனை தொடர்ந்து கலெக்டர் ரவிக்குமார் பேசியதாவது; கடந்த ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் 568 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இந்த ஆண்டு 281 மில்லி மீட்டர் மழை தான் பெய்துள்ளது. 50 சதவீதத்திற்கும் குறைவாக மழை பெய்துள்ளது. தமிழகத்தில் மழை குறைவாக பெய்துள்ள மாவட்டங்களில் தூத்துக்குடி மாவட்டம் ஒன்றாகும். பொதுவாக

அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் தான் பருவமழை பெய்யும். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தூத்துக்குடி மாவட்டத்தில் 224 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 66.6 மில்லி மீட்டர் மழை தான் பெய்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 83 மில்லி மீட்டர் மழை தான் பெய்துள்ளது. இந்த ஆண்டு நவம்பர் மாதம் 104 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. பொதுவாக பார்க்கும் போது கடந்த ஆண்டை விட மிக குறைவாக பெய்துள்ளது.

தாமிரபரணி பாசனத்தின் கீழ் உள்ள 53 குளங்களில் 12 குளங்கள் நிரம்பியுள்ளது. மீதியுள்ள குளங்கள் நிரம்பி வருகிறது. பத்து நாளில் இந்த குளங்கள் நிரம்பிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

சடையநேரி கால்வாயில் 9.7 அடி வந்தால் தான் தண்ணீர் திறக்க முடியும். தற்போது 6.74 அடி தண்ணீர் மட்டுமே இருப்பதால் தண்ணீர் திறக்க முடியாது. அடுத்த வாரம் இந்த கால்வாயை திறக்க வா#ப்பு இருக்கிறது. மழை பெய்யும் என்று டிசம்பர் மாதம் வரை எதிர்பார்ப்போம். மாவட்டத்தில் விவசாயத்திற்கு தேவையான உரங்கள் போதிய அளவிற்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விலை அதிகமாக விற்பனை செய்தால் உடனடியாக வேளாண்மை இணை இயக்குனருக்கு தகவல் தெரிவித்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். சிறு, குறு விவசாயிகள்

சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க அரசு நூறு சதவீத மானியம் அளிக்கிறது. இதற்கு மனுச் செய்யலாம் என்று அறிவித்தோம். அதன்படி 70 பேர் விண்ணப்பித்தனர். அவர்கள் அனைவருக்கும் சொட்டுநீர் பாசனம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு விட்டது. மொத்தம் 440 ஹெக்டேர் பரப்பிற்கு சொட்டு நீர்ப்பாசனத்திற்கு அனுமதி வழங்கலாம்.

பெரிய விவசாயிகளுக்கு

சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மொத்தம் 132 ஹெக்டேர் பரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது. இன்னும் பலர் இதற்கு விண்ணப்பித்ததால் 150 ஹெக்டேருக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று அரசுக்கு தகவல் அளித்திருக்கிறோம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். வேளாண்மைத்துறை சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தை சேர்ந்த இரண்டு விவசாயிகள் குஜராத் சென்று அங்கு வேளாண்மை பணிகளை பார்வையிட சென்று வந்தனர். அவர்கள் அங்கு விவசாயம் எந்த முறையில் செயல்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்தனர்.

அவர்கள் கூறுகையில், குஜராத்தில் உள்ள விவசாயிகள் மிக கடினமான உழைப்பாளிகளாக உள்ளனர். 20 ஆயிரம் தடுப்பணைகள் கட்டியுள்ளனர். 3 லட்சம் பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் விவசாயத்திற்கு மழையை ஒரு பொருட்டாகவே நினைக்காமல் விவசாயம் செ#து வருகின்றனர். விவசாயத்தில் நல்ல லாபம் பெற்று வருகின்றனர். அதே போல் இங்கு தடுப்பணை மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்து மழையை எதிர்பார்க்காமல் விவசாயம் செ#ய வேண்டும்.

மானியம் வேண்டாம் என்று விவசாயிகளே தெரிவிக்கும் அளவிற்கு அங்கு நிலமை உள்ளது. தமிழகத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு முறையான விலையை நிர்ணயம் செ#து வழங்கினால் நாமும் மானியம்

தேவையில்லை என்று சொல்ல முடியும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.குறிப்பிட்ட சில பயிர்களுக்கு மட்டுமே பயிர் காப்பீடு செய்யப்படுகிறது. எல்லா பயிர்களுக்கும் பயிர் காப்பீடு செய்தால் விவசாயிகளுக்கு பயனாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். இதற்கு இன்‹ரன்ஸ் அதிகாரி பதில் அளிக்கையில், எல்லா பயிர்களையும் பரிசோதனை செ#ய முடியாது.

அதற்கு போதிய ஆட்கள் இல்லை. வசதிகளும் இல்லை. இருப்பினும் தற்போது தனியார் ஏஜென்சீகள் மூலம் பரிசோதனை செ#ய அரசு ஏற்பாடு செ#து வருகிறது. இதனால் அதிகமான பயிர்களுக்கு காப்பீடு செய்யும் வா#ப்பு ஏற்படும் என்றார். தண்ணீரை சேமிக்க வழியில்லாததால் வீணாக மழைநீர் கடலுக்கு செல்லும் நிலை உள்ளது. இதனால் அதிகமாக செக்டேம் கட்ட

வேண்டும். 4வது பைப்லைன் திட்டம் நிறைவேற்றுவதன் மூலம் விவசாயிகளின் உரிமை பறிக்கப்படுவதாக விவசாய

சங்க நிர்வாகி தமிழ்மணி தெரிவித்தார். மாவடிப்பண்ணை தடுப்பணை திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி நிக்கோலஸ் தெரிவித்தார். இது சம்பந்தமாக மதிப்பீடு தயார் செ#து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருவதாக பொதுப்பணித்துறை இ.இ முத்துப்பாண்டியன் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயம் நல்ல முறையில் செயல்பட வே ண்டும் என்றால் 53 குளங்களையும் ஆழப்படுத்தி, ஸ்ரீவைகுண்டம் மற்றும் மருதூர் அணையை தூர்வார வேண்டும் என்று விவ

சாய சங்க நிர்வாகி கந்த

சாமி தெரிவித்தார்.

ஓட்டப்பிடாரம் பகுதியில் நிலத்தடி நீர் வற்றியதால் தாமிரபணி தண்ணீர் மூலம் பாசன மற்றும் குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செ#ய வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி பெருமாள் தெரிவித்தார். இது சம்பந்தமாக புதிய கால்வாய்அமைத்து தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாக ஆ#வு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு மேலாக இது போன்று தெரிவிக்கப்படுவதாக பெருமாள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து விவசாயிகள் தங்கள் பகுதி பிரச்னைகள் குறித்து முழுØமாக தெரிவித்தனர். காலை 11 மணிக்கு துவங்கிய கூட்டம் மதியம் 3 மணி வரை நடந்தது.

கோவில்பட்டி சப்கலெக்டர் கார்த்திகேயன், தூத்துக்குடி ஆர்.டி.ஓ நாகஜோதி, திருச்செந்தூர் ஆர்.டி.ஓ தமிழ்ராஜன், வட்டார போக்குவரத்து அதிகாரி தங்கவேல், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாண்டியன், வேளாண்மைத்துறை அதிகாரிகள் குருமூர்த்தி, மதியழகன், பொதுப்பணித்துறை தாமிரபரணி வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர்

வேலையா, உதவி பொறியாளர் ரகுநாதன், மாநகராட்சி உதவி பொறியாளர் ராமச்சந்திரன், வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அமுதன், அரசு போக்குவரத்துகழக கோட்ட மேலாளர் ஜெயராஜ் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். 4வது பைப்லைன் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தை விவசாயிகள் புறக்கணிப்பதாக அறிவிப்பு வெளியிட்டனர். ஆனால் நேற்றைய கூட்டத்திற்கு பெரும்பாலான விவசாய சங்க நிர்வாகிகள் வந்திருந்தனர். அறிவிப்பு வெளியிட்ட சிலரும் அதில் அடக்கம். இதனால் இது சம்பந்தமாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் குறைவான அளவில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மழை இல்லாததால் மானவாரி பயிர்கள் வாடி வருவதை கலெக்டரிடம் விவசாயிகள் கொண்டு வந்து காண்பித்து கண்ணீர் வடித்தனர்.

## விவசாயிகள் கூட்டத்தில் கலெக்டர் வெளிநடப்பு

நாகர்கோவில்:குமரி விவசாயிகள் கூட்டத்தின்போது இடையூறை ஏற்படுத்தியதால் கலெக்டர் நாகராஜன் கண்கலங்கியபடி வெளிநடப்பு செய்தார். இதனால் விவசாயிகள் கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்நாஞ்சில் அரங்கில் நடந்தது. கூட்டத்திற்கு குமரி மாவட்ட கலெக்டர் நாகராஜன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) வின்சன் சாம் போஸ்லின், பொதுப்பணித்துறை நீர்ஆதார செயற்பொறியாளர் சுப்பிரமணி, பாசனத்துறை தலைவர் வின்ஸ் ஆன்றோ மற்றும் திரளான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் மனுக்கள் மீதான கோரிக்கைகளுக்கு கலெக்டர் பதிலளித்துகொண்டிருந்தார். அப்போது விவசாய சங்க பிரதிநிதி பெருமாள் என்பவருக்கு பொதுப்பணித்துறையில் இருந்து அனுப்பப்பட்ட பதில் மனுவில் ஸ்டாம் ஒட்டாததால் 10 ரூபாய் அவரே சொந்த செலவில் கட்டியது குறித்து பேசினர். அந்நேரத்தில் இந்திய கம்யூ.,வை சேர்ந்த தமிழ்நாடு விவசாயசங்க மாவட்ட செயலாளர் பொன்னுலிங்க ஐயன் குறுக்கிட்டு, கலெக்டரை கைது செய்யவேண்டும் என உத்தரவு வந்த பின்பும்... எங்கே கைது செய்தார்கள் என கூறியுள்ளார்.

இதைப்பார்த்த நாகராஜன், உங்களது விவசாய சம்பந்தப்பட்ட குறைகள், கோரிக்கைகள் எது இருந்தாலும் கூறலாம் என தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் கலெக்டர் கேட்டபோது பதில் அளிக்காமல் கூட்டத்தில் இடையூறு ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் கூட்டத்தில் இருந்து கலெக்டர் வெளியேறினார். கோரிக்கைகள் குறித்து தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் தனது அலுவலக அறையில் வந்து சந்திக்குமாறு கூறிவிட்டு சென்றார். இதனால் விவசாயிகள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. பொன்னுலிங்க ஐயனிடம் சில விவசாயிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அதே நேரம் பாசனத்துறை நிர்வாகிகள், பூமிபாதுகாப்பு சங்க தலைவர், பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலெக்டர் நாகராஜனுக்கு ஆதரவாக விவசாயிகள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. கலெக்டரின் வேளாண்மை நேர்முக உதவியாளர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் முன்னிலையில் பெயரளவிற்கு கூட்டம் நடந்தது. அப்போது ஆவேசம் அடைந்த சில விவசாயிகள் பொன்னுலிங்க ஐயனை அழைத்துக்கொண்டு கலெக்டரிடம் சமரசம் பேசி அழைத்து வருவதற்கு சென்றனர். அங்கு கலெக்டர், மனுக்கள் ஏதும் இருந்தால் இங்கே கொடுங்கள் என்று கூறியுள்ளார்.

இப்பிரச்னையின் பின்னணி குறித்து விசாரித்தபோது கிடைத்தவை இவை; பொன்னுலிங்க ஐயன் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தொடர் நெருக்கடி கொடுத்ததாக கூறப்படுகிறது.மேலும் சொத்து மதிப்பு, வாங்கிய விருது, பாராட்டுக்கள் போன்றவற்றையும் விமர்சனப்படுத்தியதாக கூறப்படுகிறது. இதுபோன்ற தொடர் குற்றச்சாட்டுக்கள் விடுத்த பொன்னுலிங்க ஐயன், விவசாயிகள் கூட்டத்தில் நேற்று கூறிய கருத்தால் கலெக்டர் மேலும் மனவேதனை அடைந்ததால் இந்நிகழ்வுகள் ஏற்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இதுகுறித்து பொன்னுலிங்க ஐயன் கூறுகையில்; அரசு அலுவலர் அனுப்பிய தபாலில் ஸ்டாம் ஒட்டாததால் ரூ.10 விவசாய பிரதிநிதி கட்டியது பற்றி குறிப்பிட்டபோது, கலெக்டர் மீதான கோர்ட் உத்தரவில் கைது செய்யப்படவில்லை என நான் கூறியது உண்மைதான். அப்போது வெளிநடப்பு செய்த கலெக்டரிடம் விவசாயிளுடன் சென்று, நான் தவறாக குறிப்பிடவில்லை. கூட்டத்திற்கு வாருங்கள் என்று கூறினேன். அதற்கு, அவர் என்னைப்பற்றி தொடர்ந்து புகார் கூறிவருகிறீர்கள். செல்லுங்கள் என சொல்லிவிட்டார் என்றார். இதற்கிடையே, குமரி மாவட்ட விவசாயிகள் கூட்டத்தில் விவசாயிகள் அல்லாத ஏராளமானோர் அரசியல் கலந்துகொள்கின்றனர். இவர்களை களையெடுத்து உண்மையான விவசாயிகளை கூட்டத்தில் பங்கேற்க செய்யவேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. குமரி மாவட்ட நிர்வாகத்தில் வருவாய்த்துறை, மற்றும் பிற அரசுத்துறை ஊழியர்கள் போராட்டக்களத்தில் நேற்றே இறங்கினர். இதனால் இப்பிரச்சனை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெளியேற்றியிருக்க வேண்டும்...ளியேறியிருக்க கூடாது!

விவசாயிகள் கூட்டத்தில் கலெக்டரை அலட்சியப்படுத்திய நிகழ்வால் அவர் வெளியேறியது குறித்து விவசாய அமைப்பு பிரதிநிதிகளிடம் கேட்டோம். அப்போது அவர்கள் கூறியதாவது;

வின்ஸ் ஆன்றோ(பாசனத்துறை தலைவர்): கலெக்டரை வெறுப்பேற்றும் விதத்தில் பேசியது தவறு. ஒரு மாவட்ட கலெக்டர் என்ற மரியாதையை அவருக்கு கொடுக்க வேண்டியது அனைவரது கடமை. அதேநேரம் கூட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்துவோரை வெளியேற்றும் அதிகாரம் கலெக்டருக்கு உண்டு. அதைவிடுத்து கலெக்டரே வெளியேறியிருக்ககூடாது. இப்படி கலெக்டர் இல்லாத விவசாயிகள் கூட்டத்தில் நாங்கள் கலந்துகொள்வதில்லை என முடிவெடுத்து நாங்களும் வெளிநடப்பு செய்தோம்.

பத்மதாஸ்(பூமிபாதுகாப்பு சங்க தலைவர்): விவசாயிகள் கூட்டத்தில் விவசாய நிலமும், விவசாயம் செய்பவர்கள் மட்டுமே கலந்துகொள்ளவேண்டும். சுய விளம்பரத்திற்காக கலெக்டரை அவமரியாதையாக பேசும் செயல் கண்டிக்கத்தக்கது. இதை அனுமதிக்கக்கூடாது. அதே நேரம் விவசாயிகளை வழிநடத்தும் கலெக்டர் வெளியேறியது வருந்தத்தக்கது.
தங்கப்பன்(வேளாண் பிரதிநிதி): ஒரு மாவட்ட கலெக்டரை அவமரியாதையாக பேசுவது நாகரீகமற்ற செயல். அவ்வாறு கூட்டத்திற்கு இடையூறு செய்வோரை வெளியேற்றியிருக்க வேண்டும். ஆனால் விவசாயிகளை மனவேதனையடைய செய்யக்கூடாது என்பதை கருதி கலெக்டரே வெளியேறியது எங்களை வருத்தமடைய செய்தது.
செண்பக சேகரபிள்ளை: விவசாயிகள் கூட்டம் துவங்கியபோது கலெக்டரை நையாண்டி செய்வது போல் நடந்த விதம்தான் அவரை வெளிநடப்பு செய்யும் அளவுக்கு போனது. எனவே இனி வரும் கூட்டத்தில் உண்மையான விவசாயிகளை மட்டுமே அனுமதிக்கவேண்டும்.
பாக்ஸ்...

குழப்பம் ஏற்படுத்துவோரின் அனுமதி ரத்து; கலெக்டர்

விவசாயிகள் கூட்டத்தில் நிகழ்ந்த சம்பவம் குறித்து கலெக்டர் நாகராஜனிடம் கேட்டபோது; தமிழக அரசின் உத்தரவின்பேரில் விவசாயிகள் நலனை முதல் நோக்கமாக கொண்டு மனுக்கள் வாங்கி குறைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. இக்கூட்டங்களில் விவசாயிகள் நலனில் அக்கறை இன்றி குழப்பம் ஏற்படுத்தும் நோக்கத்தில் முயற்சி செய்வோரின் அனுமதி ரத்து செய்யப்படும் என்றார்.

## தமிழக விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம்

கிருஷ்ணகிரி: தமிழக விவசாயிகள் சங்கத்தின், மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், கிருஷ்ணகிரியில் நடந்தது. மாவட்ட பொருளாளர் சுப்பிரமணிய ரெட்டி தலைமை வகித்தார். மாவட்ட ஆலோசகர் நசீர் அகமது முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் நாகராஜரெட்டி வரவேற்றார். தீர்மானங்கள் குறித்து மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் பேசினார்.

"கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காட்டு விலங்குகளால், விவசாய பயிர்கள் நாசம் அடைந்து வருவதால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, உடனடியாக உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, வரும், 28ம் தேதி ராயக்கோட்டையில் பேரணி மற்றும் ஆர்பாட்டம் நடத்துவது, காட் ஒப்பந்தத்தை இந்திய அரசு ஏற்ககூடாது என்பதை வலியுறுத்தி, கர்நாடகா மாநிலம் மங்களூரில்

நடக்கும் போராட்டத்தில், சங்க நிர்வாகிகள் கலந்து கொள்வது, என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில், ஒன்றிய செயலாளர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர் ஜெயபால், ஒன்றிய நிர்வாகிகள் மாதேசன், கோவிந்தராஜ், கண்ணன், கோபால், தணிகாசலம், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட துணை தலைவர் முனியப்பன் நன்றி கூறினார்.

## தொடரும் கோமாரி நோயால் மாடுகள் இறந்து வரும் நிலை

பாப்பிரெட்டிப்பட்டி: கோமாரி நோயால், மாடுகள் தொடர்ந்து இறந்து வருவதால், கால்நடை வளர்ப்போர் கவலை அடைந்துள்ளனர். பாப்பிரெட்டிப்பட்டி, பொம்மிடி, கடத்தூர், தென்கரைக்கோட்டை ஆகிய பகுதியில், விவசாயத்தை நம்பி உள்ளதுடன், கால்நடைகளையும் அதிகளவில் வளர்த்து வருகின்றனர்.
இந்நிலையில், கோமாரி நோய் பாதிப்பால், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் கடந்த, ஒரு மாதமாக, நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்து வருகிறது. இப்பகுதிகளில், கோமாரி நோயை கட்டுபடுத்த, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க, விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் வேண்டுகோள் விடுத்து வந்தனர். ஆனால், கால்நடை மருத்துவர்கள், சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு சென்று நேரிடையாக சிகிச்சை அளிக்காததால், மாடுகள் தொடர்ந்து இறந்து வருகிறது. குறிப்பாக, கடத்தூர், வேப்பிலைப்பட்டி, வெங்கடசமுத்திரம், பாப்பிரெட்டிப்பட்டி, பையர்நத்தம், கதிர்புரம், பி.பள்ளிப்பட்டி, துறிஞ்சிப்பட்டி, பில்பருத்தி, எச்.புதுப்பட்டி, அதிகாரப்பட்டி, பட்டுகோணம்பட்டி, மெணசி, பூதநத்தம், மருக்காலம்பட்டி, கவுண்டம்பட்டி ஆகிய பகுதியில், கோமாரி நோயால், மாடுகள் தொடர்ந்து இறந்து வருகின்றன.
இந்நிலையில், நேற்று முன்தினம், வேப்பிØல்பபட்டியை சேர்ந்த ஜெகதீசன் என்பவருக்கு சொந்தமான மாடு, கோமாரி நோயால் இறந்தது. கோமாரி நோய் பாதித்து இறந்த மாடுகளுக்கு உரிய நிவராணம் வழங்கவும், இப்பகுதிகளில, கோமாரி நோயை கட்டுப்படுத்தவும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க, விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வரும் 29ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ஈரோடு: ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், ஈரோடு கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், வரும், 29ம் தேதி காலை, 11 மணிக்கு கலெக்டர் சண்முகம் தலைமையில் நடக்கிறது.
அன்று காலை, 11 முதல், 11.30 மணி வரை விவசாயிகளிடம் இருந்து மனுக்கள் பெறுதலும், 11.30 முதல், 12 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயம் தொடர்பான பிரச்னைகளை தெரிவிக்கவும், 12.30 முதல், 1.30 மணி வரை பிரச்னைகள் குறித்து, தொடர்புடைய அலுவலர்கள் விளக்கம் அளிக்க உள்ளனர்.
இக்கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்க, கலெக்டர் சண்முகம் அழைப்பு விடுத்துள்ளார்.

## கொப்பரை உற்பத்தி குறைவு கிலோ ரூ.77 ஆக உயர்வு

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் விலை உயர்வால், கொப்பரை உற்பத்தி குறைவால், கொப்பரை விலை கிலோ, 77 ரூபாயாக உயர்ந்து, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, கோபி, பெருந்துறை, மொடக்குறிச்சி, அவல்பூந்துறை உள்ளிட்ட பகுதிகளில், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன.
கோபி சுற்று வட்டாரத்தில், சில இடங்களில் தென்னை மரங்களில் பதநீர் இறக்கி, கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறதுமற்ற இடங்களில் கொப்பரை உற்பத்தி . அதிகளவில் உள்ளது.
உற்பத்தி செய்யப்படும் கொப்பரை, கோபி, அவல்பூந்துறை உள்ளிட்ட இடங்களில் உள்ள கொப்பரை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. கோபி, பெருந்துறை, கொடுமுடி, காங்கேயம் ஆகிய பகுதியில் எண்ணெய் உற்பத்தி ஆலைகள், கொப்பரைகளை கொள்முதல் செய்கிறதுசபரிமலை சீஸன் . காரணமாக, எண்ணெய் தேவை அதிகரித்துள்ளதால், கேரளாவுக்கு அதிகளவில் செல்கிறது.

கடந்த சில வாரங்களாக, தேங்காய் விலை ஒன்று, 10 முதல், 15 ரூபாய்க்கு விற்கப்படுவதால், கொப்பரை உற்பத்தியாளர்கள் கொப்பரை உற்பத்தியை நிறுத்தி விட்டனர்.

கொப்பரை உற்பத்தி குறைந்த காரணத்தால், கொப்பரை விலை ஒரே வாரத்தில் கிலோவுக்கு, 12 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கடந்த வாரம் ஒரு கிலோ, 65 ரூபாய்க்கு விற்கப்பட்டதுநடப்பு வாரம் கிலோவுக்கு ., 12 ரூபாய் வரை உயர்ந்து, ஒரு கிலோ, 77 ரூபாய்க்கு விற்கப்பட்டதுகொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து . வருவதால், கொப்பரை உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறியதாவது:

கோபி சுற்று வட்டாரத்தில், 1,000க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் கொப்பரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

கடும் பனிப்பொழிவால், கொப்பரை காய வைக்க முடியாத சூழ்நிலை உள்ளது . ஐந்தாறு நாட்களில் உற்பத்தி செய்யப்படும் கொப்பரை, 10 நாட்கள் வரை காய வைக்க வேண்டி உள்ளது.

தேங்காய் விலை தொடர்ந்து ஏறுமுகமாக காணப்படுவதால், கொப்பரை உற்பத்தியை நிறுத்தி விட்டனர்கொப்பரை உற்பத்தி குறைவால் ., விலை தொடர்ந்து உயர துவங்கி உள்ளது.

நடப்பாண்டு துவக்கத்தில், கொப்பரை விலை வீழ்ச்சியாக காணப்பட்டது . சராசரியாக ஒரு கிலோ, 45 முதல், 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கொப்பரை உற்பத்தி குறைவால், தற்போது ஒரு கிலோ கொப்பரை, 77 ரூபாயாக உயர்ந்துள்ளதுஎண்ணெய் விலை உயரும் அபாயமும் உள்ளது., என்றார்.

## கோமாரிக்கு நிவாரணம் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

திருச்சி: கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்கக்கோரியும், உரிய மருத்துவ வசதி செய்த தரவும் வலியுறுத்தி, கால்நடைகளுடன் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

தமிழகத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவி வருகிறது. குறிப்பாக டெல்டா மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் அதிகம் உள்ளது. இதனால் டெல்டா மாவட்டங்களில் கால்நடைகளின் இறப்பு அதிகரித்துள்ளது. கோமாரி நோயால் கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க, தமிழக கால்நடைத்துறை அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்ஆனாலும் கோமாரி நோயை . கட்டுப்படுத்த முடியவில்லைஇந்நிலையில் ஸ்ரீரங்கம் தாலுகாவில் கோமாரி. நோயால் கால்நடைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பல கால்நடைகள் இறந்துள்ளதாகவும் கூறப்படுகிறதுஇறந்த கால்நடைகளுக்கு இழப்பீடும் ., கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கவும் வலியுறுத்தி, தமிழ்நாடு காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில துணைத்தலைவர் புலியூர் நாகராஜன் தலைமையில், நேற்று காலை சோமரசம்பேட்டை அருகில் உள்ள சின்னக்குளத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதில், 100க்கும் மேற்பட்ட கால்நடைகளுடன், அப்பகுதி பொதுமக்களும், விவசாயிகளும் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம்காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்:, நேற்று காலை, 11:30 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற்றதுஇதில் கலந்து கொண்ட விவசாயிகள்., 'கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கும் நிவாரண தொகை வேண்டும்' என, கோரிக்கை விடுத்தனர்ஆட்சியர். பாஸ்கரன் கூறியதாவதுஇறந்த : கால்நடைகளுக்கு நிவாரண தொகை வழங்குவது குறித்து, விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்இவ்வாறு ., அவர் கூறினார்.

## செழித்து வளரும் வாழை

விழுப்புரம்:விழுப்புரம் அடுத்த விராட்டிக்குப்பம், ஆலாத்தூர், நன்னாடு, வி.பாளையம் மற்றும் பிடாகம் உட்பட பல கிராமங்களில் விவசாயிகள், வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இலை, காய்கள் மற்றும் பழங்களை அருகிலுள்ள விழுப்புரம் நகருக்கு எளிதில் கொண்டு வந்து, கூடுதல் விலைக்கு விற்கின்றனர். தேவை அதிகம் இருப்பதால், விவசாயிகளுக்கு விற்பனை செய்வதில் பிரச்னை இல்லை. இதனால் விவசாயிகள் ஆர்வமுடன் பயிர் ÖŒ# கின் றனர்.சில நாட்களாக பெய் யும் மழையால், வாழைக் கன்றுகள் செழித்து வளர்ந்துள்ளன.

## விவசாயிகள் நடவு செய்த நாற்றுகள்மழை இல்லாததால் தீவனமாகும் அவல

செஞ்சி:செஞ்சி தாலுகாவில் இரண்டாவது ஆண்டாக பருவ மழை பொய்த்து போனதால் நடவு செய்ய விட்டிருந்த நாற்றுகள் காய்ந்து கால்நடைகளுக்கு தீவனமாகி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனது. கடந்த ஆண்டு ஏரிப்பாசனத்தை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் ஒரு போகம் மட்டுமே விவசாயம் செய்தனர்.ஏரிகளில் தண்ணீர் இல்லாததால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. கிணறுகளும் வற்றி போயின. இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு இரண்டு மாதம் முன்பே பொன்னி நெல் நாற்று விட்டிருந்தனர்.

தீவிர மழைக்காலமான அக்., நவ., மாதத்தில் மழை இல்லாமல் ஏரிகள் வறண்டு போய் உள்ளன.இதனால் ஏரி பாசன விவசாயிகள் ஏர் ஓட்டி நடவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாய கிணற்றை நம்பி நாற்று விட்ட இடங்களிலும் கிணற்றில் தண்ணீர் இல்லாமல் நாற்றங்கால் காய்ந்து வருகின்றன. செஞ்சியில் இருந்து மேல்மலையனூர் செல்லும் வழியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் காய்ந்த நாற்றுகளை மாடுகளை விட்டு மேய்த்தும், சிலர் காய்ந்து போன நாற்றுகளை அறுத்து கால்நடைகளுக்கு கொடுத்து வருகின்றனர். நாற்றங்காலை காப்பாற்ற முடியாத அளவிற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் சாகுபடி பாதியாக குறைந்துள்ளது. எனவே இந்த ஆண்டு நெல் உற்பத்தி பாதியாக குறையும் வாய்ப்புள்ளது.

## விவசாயத்தில் தனிநபர் கூலிக்கு முற்றுப்புள்ளி ஒப்பந்த வேலைக்கு மாறிய தொழிலாளர்கள்

மேட்டூர்: தினக்கூலி அடிப்படையில் விவசாய வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள், அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, சமீபகாலமாக ஒப்பந்த அடிப்படையில், விவசாய தொழில் செய்து வருவாய் ஈட்ட துவங்கியுள்ளனர். மேட்டூர் அருகே, காவிரி கரையோர பகுதிகளில் உள்ள கோல்நாயக்கன்பட்டி, நவப்பட்டி பஞ்சாயத்தில், 2,000 ஏக்கரும் மேல் விவசாய நிலம் உள்ளதுதண்ணீர் . வசதி இருப்பதால், இப்பகுதி விவசாயிகள் ஆண்டுதோறும் தவறாமல் சம்பா சாகுபடி மேற்கொள்வது வழக்கம்.

பல ஆண்டுகளாக நவப்பட்டி சுற்றுப்பகுதி கூலி தொழிலாளர்கள் தினக்கூலி அடிப்படையில் நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளை செய்தனர்இதில் ., பெண் தொழிலாளர்களே அதிகம் ஈடுபட்டனர் . விவசாய வேலைகளில் தனிநபரின், ஒரு நாள் உழைப்புக்கு கிடைக்கும் கூலி குறைவாக இருந்தது.

இதனால், தனிநபர் கூலிக்கு முற்றுப்புள்ளி வைத்த விவசாய தொழிலாளர்கள் சமீபகாலமாக விவசாய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்கின்றனர் . தற்போது ஏக்கர் கணக்கில் கூலி நிர்ணயித்து, நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுகின்றனர்விவசாய பெண் கூலி . தொழிலாளர்கள் கூறியதாவது:

முன் விவசாய பணிக்கு செல்லும் எங்களுக்கு ஒரு நாள் கூலியாக, 100 ரூபாய் முதல், 130 ரூபாய் வரை, மட்டுமே கிடைத்ததுஇதற்காக காலை . முதல், மாலை வரை, வேலை செய்ய வேண்டும்தற்போது ஒரு ஏக்கரில் நாற்று . நடுதல், களை எடுத்தல் போன்ற பணிகளுக்கு கான்ட்ராக்ட் அடிப்படையில், 1, 200 ரூபாய் நிர்ணயம் செய்கிறோம்.

நாள் ஒன்றுக்கு அதிகபட்சம், ஐந்து ஏக்கர் நிலத்தில் விவசாய வேலைகள் செய்வோம்இதன் மூலம் ஒரு நபருக்கு தினக்கூலியாக ., 300 ரூபாய் முதல் அதிகபட்சம், 500 ரூபாய் வரை கிடைக்கும்தினக்கூலி . பணிக்கு செல்வதை விட

கான்ட்ராக்ட் எடுத்து வேலைக்கு செல்வதால், தினக்கூலியும் அதிகமாக கிடைக்கிறதுகுறுகிய காலத்தில் அதிக வருமானமும் . கிடைக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

சேலம் மட்டுமின்றி, மாநிலம் முழுவதும் பெரும்பாலான பகுதிகளில் தினக்கூலி அடிப்படையில் விவசாய வேலைக்கு சென்ற தொழிலாளர்கள், சமீபகாலமாக ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்வது குறிப்பிடத்தக்கது.

## கால்நடை சந்தை செயல்பட தடைகொளத்தூரில் விவசாயிகள் அவதி :

மேட்டூர்கோமாரி நோய் பரவல் காரணமாக :, கால்நடை சந்தை செயல்பட தடை விதித்ததால், மாற்று இடம் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டனர். மாநிலம் முழுவதும் கோமாரி நோய்க்கு, 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் பலியாகியுள்ளதுநோய் பரவுவதை தடுக்க கிராமங்களில் ., வாரம்தோறும் மாட்டு சந்தை செயல்பட தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் தாலுகா, கொளத்தூர் போண்டா மார்க்கெட்டில் வாரம் தோறும் வெள்ளிசந்தை கூடும்இங்கு . காய்கறி சந்தை ஒருபுறமும், ஆடு மற்றும் மாட்டு சந்தை ஒருபுறமும் நடக்கும். நேற்று வெள்ளிகிழமை என்பதால், கர்நாடகா மாநிலம், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் இருந்து விவசாயிகள் மாடு மற்றும் ஆடுகளை கொளத்தூர் சந்தைக்குகொண்டு வந்தனர்.

சந்தையில் ஆடு, மாடுகள் விற்பதற்கு டவுன்பஞ்., தடை விதித்ததால், விவசாயிகள் கால்நடைகளை தண்டா மெயின் ரோட்டோரம் நிறுத்தி விற்பனை செய்தனர் . இடமாற்றம் செய்ததால், அந்த இடத்துக்கு வியாபாரிகள் வரத்து குறைந்தது . இதனால்.கால்நடைகளும் குறைந்த விலைக்கே விற்பனை ஆனாது, விற்பனைக்காக ஆடு, மாடுகளை கொண்டு வந்த விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். மேலும், பல விவசாயிகள் விற்பனை ஆகாத கால்நடைகளை திரும்ப கொண்டு சென்றனர்.

தினகரன்

# இன்றைய வேளாண் செய்திகள்

## 23.11.2013

### கோமாரி நோய் தாக்குதல் எதிரொலி ஆந்திர மாடுகளுக்கு தமிழகத்தில் தடை



டியாத்தம்: வேலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவுவதை தடுக்க ஆந்திராவில் இருந்து கால்நடைகள் கொண்டு வர கால்நடை பராமரிப்பு துறை தடை விதித்துள்ளது.இந்நிலையில் குடியாத்தம் அடுத்த பரதராமி கிராம செக்போஸ்ட்டை ஆய்வு செய்வதற்காக கால்நடை மண்டல இணை இயக்குனர் கமலநாதன் நேற்றுமுன்தினம் வந்தார். அப்போது நிருபர்களிடம் அவர் கூறியதாவது:தமிழக அளவில் வேலூர் மாவட்டத்தில் கோமாரி நோயின் பாதிப்பு குறைவு. தற்போது மாவட்டத்தில் 49 கறவை மாடுகளும் 63 கன்றுகளும் கோமாரி வைரஸ் கிருமியால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளன.

இந்த வைரஸ் கிருமி 300 கி.மீ. தூரம் காற்றின் மூலம் பரவும் வாய்ப்புள்ளது. மனிதர்கள் பாதிக்கப்பட்ட கால்நடைகளை நேரில் சென்று பார்வையிடும்போது அவர்கள் ஆடை மற்றும் உடல் மூலம் தொற்றிக் கொள்ளும் வைரஸ் கிருமிகள் சுமார் 34 மணி நேரம் வீரியத்துடன் இருந்து காற்றின் மூலம் மற்ற இடங்களுக்கு பரவும். இது ஆந்திர எல்லை பகுதிகளில் இருந்து வேலூர் மாவட்டத்திற்கு பரவி உள்ளது. எனவே மாவட்ட எல்லை ஓரமுள்ள சேர்க்காடு, பரதராமி, சைனகுண்டா மற்றும் காட்பாடி வெடிமருந்து தொழிற்சாலை அருகே சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு அதில் கால்நடை மருத்துவரின் மேற்பார்வையில்

மாவட்டத்திற்குள் ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்படும் கால்நடைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கால்நடைகளின் எலும்பு, தோல், மற்றும் துணை உற்பத்தி பொருட்களை இம்மாவட்டத்தின் வழியாக கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பொய்கை சந்தை உள்ளிட்ட அனைத்து மாட்டு சந்தைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.முன்னதாக ஆந்திராவிலிருந்து கர்நாடக மாநிலத்திற்கு கால்நடைகளின் எலும்புகளை ஏற்றி வந்த லாரியை தடுத்து நிறுத்திய அதிகாரிகள் அதை மீண்டும் திருப்பியனுப்பினர்.

**மகசூல், வருமானம் 2மடங்கு அதிகரிப்பு நுண்ணீர் பாசனம் மூலம் மருந்து**

**கூர்க்கன் சாகுபடி மூலிகை உற்பத்தியை பெருக்க திட்டம்**

திருச்சி, : நுண்ணீர் பாசனம் மூலம் மருந்து கூர்க்கன் சாகுபடியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டத்தில் மூலிகை பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிகப்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கிடவும் தேசிய மூலிகை பயிர்கள் இயக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, வையம்பட்டி, தொட்டியம், உப்பிலியபுரம் பகுதிகளில் 1,000 ஏக்கரில் மருந்து கூர்க்கன் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் நுண்ணீர் பாசனம் மூலம் திருச்சி மாவட்டம் துறையூர் தளுகை கிராமத்தில் மட்டும் சுமார் 500 ஏக்கரில் மருந்து கூர்க்கன் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மருத்துவ குணங்களுக்காக பயிரிடப்படும் இந்த மூலிகை செடி கர்நாடகா போன்ற மாநிலங்கள் தவிர, பல்வேறு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உடல் குறைப்பு, சர்க்கரை மற்றும் ஆஸ்துமா நோய்களை குணப்படுத்தவும் இந்த மருந்து கூர்க்கன் (கோலியஸ்) பயன்படுகிறது.

இது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில்,

திருச்சி மாவட்டத்தில் நடப்பாண்டு 500 ஏக்கரில் மருந்து கூர்க்கன் சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 100 ஏக்கரில் சாகுபடி நிறைவடைந்துள்ளது. டிசம்பர் மாதத்திற்குள் மேலும் 150 ஏக்கரில் சாகுபடி முடிந்து விடும். மூலிகை பயிர்களில்

சாகுபடி பரப்பினை அதிகப்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கிட தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு 20 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதற்கென ரூ.54 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. என்றார்.

துறையூர் தளுகை கிராமத்தை சேர்ந்த விவசாயி ஆனந்தன் கூறுகையில், கடந்த 6 வருட மாக நுண்ணீர் பாசனம் மூலமாக மருந்து கூர்க்கன் சாகுபடி செய்து வருகிறேன். எக்டேருக்கு ரூ.8,600 மான்யம் வழங்கப்படுகிறது. நுண்ணீர் பாசனம் மூலமாக சாகுபடி செய்வதால் மகசூல் மற்றும் வருமானம் 2 மடங்கு அதிகரிக்கிறது. சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 4 டன் வரை தான் மகசூல் எடுக்க முடியும். நுண்ணீர் பாசனம் மூலமாக ஏக்கருக்கு 8டன் வரை மகசூல் எடுக்கலாம் என்றார்.

**மேட்டூர் நீர்மட்டம் தொடர்ந்து உயர்வு**



மேட்டூர்: காவிரி டெல்டா பகுதிகளில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக நீர் திறக்கப்படுவது கடந்த 16ம் தேதி முதல் நிறுத்தப்பட்டது. அதே வேளையில், நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் அணை க்கு வரும் நீரின் அளவு அதிகரித்தது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம், மெல்ல மெல்ல உயர்ந்து வந்தது. நேற்று முன்தினம் 83 அடியாக இருந்த அணை யின் நீர்மட்டம், நேற்று 83.61 அடியாக உயர்ந்தது. நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்துள்ளதால் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 7,942 கனஅடியாக சரிந்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 384 கனஅடி வீதம் நீர் திறந்து விடப்படுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.11.2013**

கோமாரி நோயை கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும் **பா.ஜனதா கோரிக்கை**

கோவை

கோவை மாவட்ட பாரதீய ஜனதா விவசாய அணி தலைவர் என்.மாணிக்கம்,துணை தலைவர் ஆறுமுகசந்திரமோகன் மற்றும் நிர்வாகிகள் முரளி,பாலகிருஷ்ணன் ஆகியோர் மாவட்ட கலெக்டர் அர்ச்சனாபட்நாயக்கை சந்தித்து அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது–

கோமாரி நோய் கால்நடைகளை கொல்லும் மிகவும் கொடூரமான தொற்று நோயாகும்.கோவை மாவட்டத்தில் 2 லட்சத்து 33 ஆயிரம் மாடுகள் இருப்பதாக கூறப்படுகிறது.இதில் இதுவரை 31 மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளது.இரண்டு கன்றுக்குட்டி, 2 மாடு இறந்துள்ளதாக கால்நடை மருத்துவர்கள் கூறுகிறார்கள்.இந்த நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளில் கறக்கப்படும் பால்கள் அருந்துவோருக்கும் நோய் தொற்றிக் கொள்ள வாய்ப்புள்ளது.இந்த நோய் பரவாமல் இருக்க அரசு முன்எச்சரிக்கை நடவடிக்கையை போர்க்கால அடிப்படையில் எடுக்க வேண்டும்.கிராமந்தோறும் கால்நடை மருத்துவக்குழுவை அமைத்து மாடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும்.மேலும் இந்த நோயால் இறந்து போன மாடுகளுக்கு நிவாரண தொகை தலா ரூ.. 50 ஆயிரம் அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

**சிட்டுக்குருவி ஏற்றுமதி**

கிராமப்புறங்களில் சிட்டுக்குருவிகளுக்கென மக்கள் மனதில் தனி இடம் உண்டு. பறவை இனங்களில் மிக மிக சிறிய பறவை இது. கீச் கீச் என்று கத்திக்கொண்டு, அது தத்தி தத்தி வந்து, கொத் கொத் என்று சிதறிக்கிடக்கும் தானியங்களையும், பூச்சிகளையும் கொத்தி தின்னும் அழகைக்காண கண் கோடி வேண்டும் என்பார்கள். மனிதனின் நட்பு பறவை அடைக்கலான் சிட்டுக்குருவி. பொதுவாக பறவைகள் மனிதர்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத இடங்களிலும், காடுகளிலும்தான் தங்கள் இருப்பிடத்தையும், வாழ்விடத்தையும் அமைத்துக்கொள்ளும். ஆனால், சிட்டுக்குருவி அதிகமாக மக்கள் வாழும் இடங்களில்தான் அதிலும், குறிப்பாக வீடுகளில்தான் வசிக்கும்.

அறிவியல் ரீதியாக சிட்டுக்குருவி இனங்களுக்கு 1758–லிலேயே பெயர் சூட்டப்பட்டதற்கு வரலாறு உண்டு. பண்டைய கால தமிழ் இலக்கியங்களிலும், ஷேக்ஸ்பியரின் ஹேம்லட்டிலும், கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிளிலும் சிட்டுக்குருவியின் பெயரைப் பார்க்கலாம். பாரதியார்கூட காக்கை குருவி எங்கள் ஜாதி என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் திரைப்படங்களில் அதிகம் ஒலிக்கும் பெயர் சிட்டுக்குருவிதான். விவசாயக் குடும்பங்களில் சிட்டுக்குருவியை செல்வத்துக்கும், வளத்துக்குமான அடையாளமாகத்தான் கருதுவார்கள். அதனால்தான் சிட்டுக்குருவியை விரட்டுவதோ, பிடிப்பதோ கிடையாது. சிட்டுக்குருவியின் நடமாட்டத்தை இப்போது காணுவது அரிதாகிவிட்டது. இதற்கு காரணம் பொதுவாக வீடுகளில், அதிலும் குறிப்பாக கூரை வீடுகளில், ஓட்டு வீடுகளில்தான் சிட்டுக்குருவிகள் கூடுகட்டி வசிப்பது வழக்கம். இப்போது பெரும்பாலான வீடுகள் காரை வீடுகளாக இருப்பதாலும், அதற்கேற்ற இரை வகைகள் கிடைக்காததாலும் இதன் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

இது மட்டுமல்லாமல், ஆங்காங்கு அமைக்கப்படும் செல்போன் டவர்களில் இருந்து வெளியேற்றப்படும் கதிர் வீச்சை அந்த சின்னஞ்சிறு இதயத்தால் தாங்கமுடியாமல் உயிரை விட்டுவிடுகின்றன. தற்போது இந்த சிட்டுக்குருவி இனம் அழிந்துகொண்டு வரும் இனமாகிவிட்டது. உடனடியாக சிட்டுக்குருவி இனத்தைக்

காப்பாற்றாவிட்டால், இன்னும் சில ஆண்டுகளில் எதிர்கால குழந்தைகளுக்கு சிட்டுக்குருவி என்றால் என்ன? என்பதை படங்களைக் காட்டித்தான் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று பறவை ஆர்வலர்கள் கருதுகிறார்கள்.

ஒரு காலத்தில் அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் நிறைந்து இருந்த சிட்டுக்குருவி இனம், இப்போது அத்தி பூத்தாற்போல எங்கேயாவதுதான் காணப்படுகிறது. அதற்கும் இப்போது ஆபத்து வந்துவிட்டது. வெளிநாடுகளுக்கு சிட்டுக்குருவிகளை ஏற்றுமதி செய்யும் வேலை நடக்கிறது என்கிறார்கள். சில நாடுகளில் சிட்டுக்குருவிகளை வைத்து மருந்து தயாரிக்கிறார்கள். அதற்காகத்தான் சிட்டுக்குருவிகளை பிடித்து விற்பவர்களிடம் இருந்து வாங்குகிறார்கள் என்றும் அரசல்புரசலாக செய்திகள் வருகிறது. பொதுவாக மிருகங்கள், பறவைகளையெல்லாம் இப்போது யாராலும் காடுகளுக்குக் கூட சென்று வேட்டையாட முடியாது. வனத்துறையினர் கண் கொத்தி பாம்பாய் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். ஆனால், சிட்டுக்குருவிகளையாரும் பிடித்தாலோ, அல்லது வேட்டையாடினாலோ அவர்களால் ஒரு நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை. காரணம் சர்வதேச இயற்கை பாதுகாப்பு யூனியனிலும் சிட்டுக்குருவியை அக்கறை காட்டவேண்டிய பறவை இனமாக குறிப்பிடவில்லை. இந்தியாவிலும் வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிட்டுக்குருவி இல்லை. இந்த சட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு பட்டியலில் சிட்டுக்குருவி கொண்டுவரப்பட்டால்தான் வனத்துறை நடவடிக்கை எடுக்க முடியும்.

சீனாவில் பல ஆண்டுகளுக்கு முன்பு சிட்டுக்குருவிகள் உணவு தானியத்தை தின்கிறது என்று சிட்டுக்குருவிகளை ஒழிக்க சட்டம் போட்டு ஒழித்தார்கள். இதைத்தொடர்ந்து கடுமையான உணவு பஞ்சம் ஏற்பட்டது. காரணம் சிட்டுக்குருவிகள் உணவு தானியத்தை ஏதோ கொஞ்சம் அதுவும் கீழே சிதறிக்கிடக்கும் உணவு தானியத்தைத்தான் கொத்தித்தின்னும். ஆனால் அதற்கும் அளவுகடந்து அதிகமாக உணவு தானியத்தை பாழ்படுத்தும் பூச்சிகளை அழிக்கும். அந்த வேலையைப் பார்க்க சிட்டுக்குருவிகள் இல்லாததால்தான், பூச்சிகளால் உணவு தானியங்கள் அழிக்கப்பட்டு பஞ்சம் ஏற்பட்டது என்பதை உணர்ந்த சீன அரசு, மீண்டும் சிட்டுக்குருவிகளை வளர்க்கவும், அதன் எண்ணிக்கையைப்

பெருக்கவும் நடவடிக்கை எடுத்தது. அதுபோல, ஒரு நிலைமை இந்தியாவிலும் வராமல் இருக்க வேண்டுமானால், உடனடியாக வனஉயிரின சட்டத்தின் பட்டியலில் சிட்டுக்குருவிகளைச் சேர்க்கவும், அதை பிடிப்பதை தடைசெய்யவும், சிட்டுக்குருவிகள் இனத்தைக் காப்பாற்றவும் மத்திய–மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரைக்கால் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி



காரைக்கால் மாவட்ட கலெக்டர் டாக்டர் அ.முத்தம்மா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

காரைக்கால் மாவட்டத்தில் கால்நடைத்துறை சார்பில் கடந்த செப்டம்பர் 23–ந் தேதி முதல் அக்டோபர் 5–ந் தேதி வரை அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தற்பொழுது காரைக்கால் மாவட்டத்தை ஒட்டிய நாகப்பட்டிணம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் கால்நடைகள் கோமாரி நோய் தாக்குதலுக்குள்ளாகி இருப்பது தெரிய வருகிறது. எனவே, காரைக்கால் மவட்டத்தை சார்ந்த கால்நடை வளர்ப்போர்கள் இதுவரை தங்களது கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடாமல் இருந்தால் உடனடியாக தடுப்பூசி போட்டுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வெளியூர் களில் இருந்து வாங்கி வரும் கால்நடைகள் பற்றிய விபரங்களை அருகிலுள்ள கால்நடைத்துறைக்கு உடனடியாக தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காரைக்கால் மாவட்டத்தில் கோமாரி நோய்க்கான

மருந்துகள் போதுமான அளவில் இருப்பதால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவை யில்லை. இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கோமாரிநோய் தாக்குதல் எதிரொலி தஞ்சையில் வெறிச்சோடி காணப்பட்ட மாட்டு சந்தை**



தஞ்சாவூர்,

கோமாரி நோய் தாக்குதல் எதிரொலியால் தஞ்சையில் தற்காலிகமாக மாட்டு சந்தை மூடப்பட்டது.இதனால் தஞ்சையில் நேற்று மாடுகள் எதுவும் வராததால் சந்தைவெறிச்சோடி காணப்பட்டது.

<u>கோமாரி நோய் தாக்குதல்</u>

தஞ்சை மாவட்டத்தில் கால்நடைகள் கோமாரி நோய் தாக்குதலுக்கு ஆளாகி ஒரு சில இடங்களில் கால்நடைகள் இறந்துள்ளன. இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது தொடர்பாக கால்நடை மருத்துவர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு போர்கால அடிப்படையில் பாதிக்கப்பட்ட மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் முழுவீச்சில் தடுப்பு மற்றும் மருத்துவ சிகிச்சை பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோமாரி நோய் தாக்குதலுக்கு ஆளான கால்நடைகள் தனி இடத்தில் வைத்து பராமரிக்க அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. இந்த கால்நடைகள் மற்ற கால்நடைகளுடன் நின்றால் அந்த கால்நடைகளுக்கும் பரவ வாய்ப்பு உள்ளது.


தஞ்சை மாவட்டத்தில் 4 இடங்களில் வாரச்சந்தை நடைபெற்று வருகிறது. தஞ்சையில் வெள்ளிக்கிழமையும், பட்டுக்கோட்டையில் திங்கட்கிழமையும், திருக்காட்டுப்பள்ளியில் வியாழக்கிழமையும், திருவோணத்தில் ஞாயிற்றுக்கிழமையும் வாரச்சந்தை நடைபெற்று வருகிறது. திருக்காட்டுப்பள்ளியில் ஆடுகளும், மற்ற ஊர்களில் மாடுகள் மற்றும் ஆடுகளும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

<u>வெறிச்சோடி காணப்பட்ட சந்தை</u>

தஞ்சை மாவட்டம் மற்றும் அருகாமையில் உள்ள மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு, அவைகள் வேறுபல பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதன்காரணமாக தற்போது கோமாரி நோய் தாக்கிவரும் சூழ்நிலையில் நோய் தாக்கிய கால்கடைகள் மூலம் நோய் இல்லாத பகுதிகளுக்கும் நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு தற்போது ஏற்பட்டுள்ள கோமாரி நோய் நிலைமை சரியாகும் வரை தஞ்சை மாவட்டத்தில் 4 இடங்களில் நடைபெறும் கால்நடை சந்தைகள் தற்காலிகமாக மூடப்பட்டு, கால்நடைகள் விற்பனைக்கு வருவது நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் வழக்கமாக வெள்ளிக்கிழமை என்றாலே பரபரப்பாக காணப்படும் தஞ்சை வடக்குவாசலில் உள்ள மாட்டு சந்தை நேற்று வெறிச்சோடி காணப்பட்டது. கால்நடை விற்பனையாளர்கள் தற்காலிகமாக கால்நடைகளை விற்க மற்றும் வாங்க வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது ஆடு இறைச்சிக்கு இணையாக மாட்டு இறைச்சியும் விற்பனை செய்யப்படுகிறது. தஞ்சை கீழவாசல் பகுதியில் மாடு வெட்டுவதற்கான இடம் உள்ளது. தற்போது கோமாரி நோய் கால்நடைகளை தாக்கி வருவதால் மாடு வெட்டும் இடத்தையும் தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

‘ஹெலன்’ புயல் ஆபத்தில் இருந்து தமிழகம் தப்பியது



சென்னை

‘ஹெலன்’புயல் ஆபத்தில் இருந்து தமிழகம் தப்பியது.

**கரையை கடந்த புயல்**

கடந்த சில தினங்களுக்கு முன்பு மத்திய வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றது. அந்த புயலுக்கு ‘ஹெலன்’ என்று பெயரிடப்பட்டது. அந்த புயல் தமிழகத்தை தாக்க வாய்ப்பு இருப்பதாக கருதப்பட்டது. ஆனால் பின்னர் அது ஆந்திராவை நோக்கி நகர்ந்து சென்றது.இன்று காலை 11 மணி அளவில் ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினத்துக்கு கிழக்கு வடகிழக்கே 60 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டிருந்த ஹெலன் தொடர்ந்து மேற்கு நோக்கி நகர்ந்து நேற்று பிற்பகல் 1.30 மணியில் இருந்து 2.30 மணிக்குள் மசூலிப்பட்டினம் அருகே கரையை கடந்தது. அப்போது, மணிக்கு 80 கி.மீ. முதல் 90 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியதுடன், கனமழையும் பெய்தது.

**தமிழகம் தப்பியது**

‘ஹெலன்’ புயல் ஆபத்தில் இருந்து தமிழகம் தப்பியது. என்றாலும் வடகிழக்கு பருவமழை காரணமாக தமிழகத்தில் ஒருசில பகுதிகளில் நாளை (சனிக்கிழமை)

மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக சிவகிரியில் 9 செ.மீ. மழை பதிவாகி இருந்தது. கோவில்பட்டி மற்றும் புதுச்சேரியில் தலா 4 செ.மீ. மழையும், தக்கலை, சூரன்குடி, திண்டிவனம் ஆகிய பகுதியில் தலா 3 செ.மீ. மழையும் பெய்து இருந்தது.